# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் -10 | இதழ் -1 | ஆகஸ்ட் 2025 | விலை ரூ.15/- |
| Volume - 10 | Issue - 1 | August 2025 | Price Rs.15/- |





வெற்றிகரமாக 10 ஆம் ஆண்டில் அச்சாரம்


J4 STUDIOS
யுவன் சங்கர் ராஜா
இசையில்
E5 ENTERTAINMENT
J. JAYAKRISHNAN PRESENTS
ஆகஸ்ட்
1
முதல்
உலகமெங்கும்
WITH REAL TIGER
கதையின் நாயகனாக
புகழ் நடிக்கும்
MR.ZOO KEEPER
U
STORY SCREENPLAY DIALOGUE DIRECTION : J.SURESH
DOP : THANVIR MOHIDIN EDITOR : KS.AZEEB LYRICS : GANGAI AMARAN SNEHAN
ART : KALVILAI SAMUEL RAJAN CHOREOGRAPHY : RADHIKA STILLS : DILIP KUMAR ACTION : PRATHEEP DINESH
CASTING DIRECTOR : RADHIKA COSTUME DESIGNER : SURUTHI COSTUMES : E.LOGU YADAV DOLBY ATMOS : UKLAYYAPAN
PRO : NIKIL MURUKAN PRODUCTION EXECUTIVE : M.KARTHIKEYAN DESIGNS : SASI & SASI - ADK
PRODUCED BY : S.RAJARATHINAM AROCKIADASS A
Digitally
U1

# ஆசிரியர் பக்கம்


# அச்சாரம்

மலர் – 10 இதழ் –1 ஆகஸ்ட் 2025

வெளியீட்டாளர் – ஆசிரியர்
**M.C.சேகர் B.E.,**

இணை ஆசிரியர்கள்
P.ரஞ்சித்குமார், பாலகுமார்சோமு, ,
சே.உமா,

துணை ஆசிரியர்கள்
T.மதுராஜ், A. NANDAN
R.சரண்குமார் B.E., A.E.SELVAM
A.K.MUTHU,

கௌரவ ஆசிரியர்
M.SIVAKUMAR

பொறுப்பாசிரியர்
M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,

சிறப்பாசிரியர்
R.K அன்பழகன்,
T.அன்பழகன்,

முதன்மை நிருபர் – ஆலோசகர்
பாப்பனப்பட்டு வ.முருகன்

நிருபர்கள்
A.சரவணன்
B.P.முன்னா

புகைப்படக் கலைஞர்
K.சுரேஷ் B.Tech.,

சட்ட ஆலோசகர்கள்
K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,
C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,
P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,

வடிவமைப்பு:
4 மீடியா டிசைன்ஸ் @ 7871696917



SF1, 2nd Floor, 5/10, Anna Colony,
Virugambakkam, Chennai - 600 092.
**Cell: 9444153340**
E-mail: accharam2016@gmail.com




அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். ஆகஸ்ட் 1ல் வெளிவரும் அச்சாரம் 10ஆம் ஆண்டின் 1 ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகையினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...

**அச்சாரம் மாத இதழ் 10 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதற்கு காரணமான வாசகர்கள் விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டிருக்கும் நல் உள்ளங்களுக்கு மிக்க நன்றி.**



**M.C.சேகர்** B.E., *ஆசிரியர்*
*செல்:* **9444153340**




# இராசுக்குட்டி பதில்கள்

**ரசிக்கவும் சிந்திக்கவும்படியான கருத்து ஒன்று கூறுங்கள்...**

- தி.ஆனந்தி, சென்னை



நண்பரின் புலம்பல் இது. படித்துப் பாருங்கள், நீங்கள் கேட்டது போல இருக்கும்.

காலையில் எழுந்து பல் துலக்கச் சென்றால், தொலைக்காட்சி விளம்பரத்தில் வெள்ளைக் கோட்டு அணிந்து, குறுந்தாடி வைத்த மருத்துவர் தோற்றமுடையவர் தோன்றுகிறார்.

உங்கள் பற்களிடையில் பதுங்கியிருக்கும் கிருமிகளை, உங்கள் பற்பசை கொல்லுமா? எங்கள் பற்பசையைப் பயன்படுத்தினால், பன்னிரண்டு மணி நேரம், உங்கள் பற்களுக்கும் வாய்க்கும் கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு!" என்று பாடம் நடத்துகிறார்.

இப்படியே போனால், வீடு வீடாக வந்து காலையில் பல் துலக்கி, ஹோம் டெலிவரி' சேவைக்குக் கட்டணம் வசூலித்து, பில் போட்டுவிடுவார்கள் போலிருக்கிறது.

கழிவறைக்குச் சென்றால், அங்கே ஒரு முன்னாள் நடிகர் தோன்றுகிறார். வலது கையில் துடைப்பம், இடது கையில் கிருமிநாசினி பாட்டிலுடன், நிறுத்துங்கள்! உட்காராதீர்கள்!" என்கிறார். உங்கள் கழிவறை நூறு சதவீதம் சுத்தமாக இருக்கிறதா?" என்று கேட்கிறார்.

வாரத்துக்கு ஒரு முறை சுத்தம் செய்கிறேன், நீங்கள் வெளியேறுங்கள்!" என்று சொன்னால், அவர் கையில் பூதக்கண்ணாடியுடன் ஆராய்ச்சி செய்கிறார்.

இது போதாது! எங்கள் கழிவறை சுத்திகரிப்பு திரவத்தைப் பயன்படுத்தினால், கிருமிகள் அனைத்தும் அழிந்து, உங்கள் கழிவறை நாள் முழுவதும் சுத்தமாக இருக்கும்!" என்கிறார்.

நான், நாள் முழுவதும் கழிவறையில் வாழவில்லையே!" என்று கூறினால், "எங்கள் ஸ்மார்ட் கழிவறை' போட்டியில் வென்றால், வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும்!" என்று கூப்பன் ஒன்றை நீட்டுகிறார்.

"வெளிநாடு இருக்கட்டும், முதலில் நான் வெளியேற்ற வேண்டும்! நீங்கள் முதலில் வெளியேறுங்கள்!" என்று கதவைச் சாத்த வேண்டியிருக்கிறது.

வெளியே வந்தால், ஒருவர் ஓடி வந்து என் கையைப் பிடித்து, மைக்ராஸ்கோப்பில் காண்பித்து, □பாருங்கள், உங்கள் உள்ளங்கையில் ஆயிரக்கணக்கான கிருமிகள்!" என்கிறார்.

"நான் நன்றாகக் கை கழுவிவிட்டு வந்தேன்!" என்று சொன்னால், □வெறும் தண்ணீரில் கழுவினீர்களா? எங்கள் ஹேண்ட் வா' எக்ஸ்பர்ட்டைப் பயன்படுத்தினீர்களா? இல்லையென்றால், கிருமிகள் எப்படி அழியும்?" என்று பயமுறுத்தும் புன்னகையுடன் கேட்கிறார்.

"நான் பிறந்தது முதல் கழிவறையில் கை வைத்து திரிந்தவன் இல்லை!" என்று கூறி, குளியலறைக்கு ஓட வேண்டியிருக்கிறது.

குளியலறையில், ஒரு பெண்மணி சோப்புடன் நின்று, "உங்கள் தோலின் பத்து பிரச்சனைகளுக்கு இந்த சோப்பே தீர்வு!" என்று சோப்பை மூக்கின் முன் நீட்டுகிறார்.

"எனக்கு அப்படியெல்லாம் பிரச்சனைகள் இல்லை, வெளியே போங்கள்!" என்று சொன்னால், "எங்கள் சோப்பைப் பயன்படுத்தினால், உங்கள் அக்குள் முதல் தொப்புள் வரை கிருமிகள் அழிந்து, இருபத்தி நான்கு மணி நேர பாதுகாப்பு!" என்று, மற்றொரு பெண் பின்னால் இருந்து எழுகிறார்.

"உலகத்து கிருமிகள் எல்லாம் என் உடலை குத்தகைக்கு எடுத்து வாழ்கின்றனவா?" என்று கூறி, அவர்களை வெளியேற்றி, குளித்து முடிக்கிறேன்.

நிம்மதியாகச் சாப்பிடலாம் என்று ஒரு பிடி சோற்றை வாய்க்கு எடுத்துச் செல்லும் போது, வேலைக்காரி வேடத்தில் ஒரு விளம்பர மாடல் கையைப் பிடித்து நிறுத்துகிறார். □பாத்திரம் கழுவும் போது நன்றாகக் கழுவினீர்களா?" என்று என் மனைவியிடம் கேட்கிறார்.

என் மனைவி பயந்து, திருதிருவென முழிக்க, "எங்கள் வேம்பும் எலுமிச்சையும் கலந்த பாத்திர சுத்திகரிப்பு திரவத்தைப் பயன்படுத்தினால், கிருமிகள் அழிந்து, பாத்திரங்கள் பளபளக்கும்!"

என்கிறார்.

"நிம்மதியாகச் சாப்பிடவும் விடமாட்டீர்களா?" என்று எழுந்து தண்ணீர் குடிக்கச் சென்றால், அங்கேயும் விடவில்லை.

ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து ஒருவர், "உங்கள் தண்ணீர் சுத்தமானதா? எங்கள் தண்ணீர் நூறு சதவீதம் கிருமி இல்லாதது, கூடுதலாக இரும்புச் சத்து சேர்க்கப்பட்டுள்ளது!" என்கிறார்.

"தண்ணீரையே நீங்கள் கண்டுபிடித்தது போலப் பேசுகிறீர்கள்!" என்றால், □இரும்புச் சத்து, சார், இரும்புச் சத்து!" என்று பாட்டிலை ஆட்டுகிறார்.

"இரும்புச் சத்து வேண்டுமென்றால், இந்த ஜன்னல் கம்பியையே கடித்து சாப்பிடுகிறேன்!" என்று துரத்திவிட்டு, சட்டை அணியப் போகிறேன்.

அங்கே மற்றொரு, ஷநிபுணர்' கையில் பாட்டிலுடன் நிற்கிறார். அவர் பேசுவதற்கு முன், "இது சத்தியமாக சுத்தமாகத் துவைத்த சட்டைதான்!" என்கிறேன்.

அவர் சிரித்தபடி, □துவைத்தீர்கள், ஆனால் எங்கள் தயாரிப்பில் இரண்டு சொட்டு சேர்த்து துவைத்தீர்களா? அப்படி செய்தால், உங்கள் ஆடையில் ஒரு கிருமி கூட இருக்காது!" என்கிறார்.

சட்டையே வேண்டாம் என்று ஹேங்கரை எறிந்துவிட்டு, வீட்டு ஹாலுக்கு வருகிறேன். அங்கே ஒரு பெண், "சார், காலைத் தூக்குங்கள்!" என்று தரையை சுத்தம் செய்கிறார். "என்னாச்சு?" என்று கேட்டால், "தரையெல்லாம் கிருமிகள்! எங்கள் தரை சுத்திகரிப்பு திரவம் கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை அழித்து, உங்கள் தரையை பளபளப்பாக்கும்!" என்கிறார்.

"கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் உங்களுக்கு எப்படித் தெரிகிறது?" என்று கேட்டால், "டெக்னாலஜி, சார், டெக்னாலஜி!" என்கிறார்.

காலையில் எழுந்தால் கிருமி, கழிவறை சென்றால் கிருமி, கை கழுவினால் கிருமி, பல் தேய்த்தால் கிருமி, குளித்தால் கிருமி, நடந்தால் காலில் கிருமி, தரையில் கிருமி, உட்கார்ந்தால் கிருமி, சாப்பிட்டால் கிருமி, பாத்திரத்தில் கிருமி, தண்ணீர் குடித்தால் கிருமி, ஆடையில் கிருமி, தும்மினால் கிருமி, தூங்கினால் கட்டிலில் கிருமி, எழுந்தால் மறுபடியும் பற்களில் கிருமி. இப்படி தினமும் புலம்ப வைக்கிறார்கள்.

"இந்தப் பூமியில் கிருமி நாசினிகள் வருவதற்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்தார்கள், மனிதர்கள் வருவதற்கு முன்பே கிருமிகள் வாழ்ந்தன. அவை தனியாக இருக்கட்டும்! இப்படி உலகத்தையே கழுவி, துடைத்து, கிருமிகளை அழித்து, பளபளப்பாக்கி, பவுடர் போட்டு அழகு பார்க்கப் போகிறீர்களா?" என்று கேட்கிறேன்.

என் மனைவி சொன்னாள், "இந்தத் தொலைக்காட்சியிலிருந்து தான் எல்லா வியாபாரக் கிருமிகளும் வீட்டுக்குள் வருகின்றன. முதலில் அதை அணைத்துவிடுங்கள்!" என்று. நானும் தொலைக்காட்சியை அணைத்து விட்டேன்.அதிலிருந்து எங்கள் வீட்டில் கிருமிகள் இருக்கலாம், ஆனால் வியாபாரக் கிருமிகள் இல்லை. இப்போது நானும், என் மனைவியும், குழந்தைகளும், கிருமிகளும் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறோம்.

**புதிதாக கார் வாங்கியுள்ள எனக்கு, பாதுகாப்பான கார் பயணத்திற்கான டிப்ஸ் தாருங்களேன்...**

- ஆர்.ஆறுமுகம், கடலூர்



நவீன வாகனங்கள், கண்ணாடி-கள் மூடப்பட்டு, குளிரூட்டப்பட்ட சூழலில், எளிதாக மணிக்கு 120 அல்லது 140 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டவை.

இதனால், நாம் மணிக்கு 100 அல்லது 120 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும்போது, மெதுவாகச் செல்வதைப் போல ஒரு மாயத் தோற்றம் ஏற்படுகிறது.

மேலும், நம்முடன் பயணிக்கும் மற்ற வாகனங்கள், நம் வேகத்தை ஒத்தோ அல்லது அதிக வேகத்தில் செல்லும்போதும், இந்த மாயத் தோற்றம் தோன்றுகிறது.

இதை, மோஷன் இன்ட்யூஸ்டு பிளைண்ட்னஸ்' (Motion Induced Blindness) என்று அழைப்பார்கள்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் வாகனத்தை ஓட்டும் போது, ஒரு வினாடிக்கு 27 மீட்டர் தூரத்தைக் கடந்து விடுவீர்கள். இந்நேரத்தில், உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனம் திடீரென பிரேக் அழுத்தினால், உங்கள் மூளை அதை உணர்ந்து, காலுக்கு பிரேக் அழுத்த உத்தர விடுவதற்கும், பிரேக் செயல்பட்டு வாகனத்தை நிறுத்துவதற்கும், சிறிது நேரம் தேவைப்படுகிறது.

இதில் மிக முக்கியமானது, உங்கள் வாகனத்துக்கும், முன்னால் செல்லும் வாகனத்துக்கும் இடையிலான இடைவெளி. போதுமான இடைவெளி இல்லையென்றால், விபத்து நிச்சயம்.

இந்த மோஷன் இன்ட்யூஸ்டு பிளைண்ட்னஸ்' பிரச்சனையைத் தவிர்க்க, நீங்கள் மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தைத் தாண்டும் போது, உங்கள் வாகனத்தில் எச்சரிக்கை ஒலி (பீப்) ஒலிக்குமாறு அமைப்பு செய்யுங்கள். இந்த வேகக் கட்டுப்பாட்டு எச்சரிக்கை, மிகவும் முக்கியமானது. இதுவரை இதை அமைக்கவில்லை என்றால், உங்கள் ஓட்டும் திறமைக்கு ஏற்ப, மணிக்கு 80 அல்லது 100 கிலோமீட்டருக்கு மேல் செல்லா-தவாறு அமைத்துக்கொள்ளுங்கள். நம் நாட்டு நெடுஞ்சாலைகளில், மணிக்கு 100 கிலோமீட்டருக்கு மேல் செல்வதே ஆபத்தானது. மற்றொரு முக்கிய பிரச்சனை, சாலையோரத்தில் நிற்கும் வாகனங்கள். மருத்துவத் தகவல்படி, ஒரு நிமிடத்துக்கு மேல் தொடர்ச்சியாக சாலையில் முழு கவனத்துடன் பார்க்க முடியாது. ஒரு வினாடிக்கு 27 மீட்டர் கடக்கும் வேகமும், ஒரு நிமிடத்துக்கு மேல் கவனத்தைத் தக்கவைக்க முடியாத மனித மூளையின் தன்மையும், சாலை விபத்துகளுக்கு முக்கியக் காரணங்களாக அமைகின்றன. வேகம் மகிழ்ச்சி அளிக்கும், ஆனால் கொல்லும்" (ளுிநநன வாசடைடள டிரவ மடைடள) என்பது, அனைவருக்கும் தெரிந்த வாக்கியம். வேகத்தின் மீதான ஆசை, நம்மை வேதனையில் ஆழ்த்திவிடும். எனவே, பாதுகாப்பாக வாகனம் ஓட்டி, விபத்துகளைத் தவிர்ப்போம்.

## வாழ்க்கைப் பற்றிய குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க உதவுங்கள்...

- வெ.பிரவீன், விழுப்புரம்

இன்று நீ யாருடன் பேசியே தீர வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிறாயோ, ஒரு நாள் அவர்களையே வேண்டாம் என்று சொல்ல வைத்துவிடும் இந்த வாழ்க்கை. இன்று நீ எதைப் பிடிவாதமாக விரும்புகிறாயோ, ஒரு நாள் அதையே, வெறுக்கிறேன்" என்று உன்னைச் சொல்ல வைத்துவிடும் இந்த வாழ்க்கை. இன்று நீ எதையெல்லாம் வெறுத்து ஒதுக்கித் தள்ளுகிறாயோ, ஒரு நாள் அதையே பிடிவாதமாக, "வேண்டும்" என்று உன்னைச் சொல்ல வைத்துவிடும் இந்த வாழ்க்கை.

இன்று நீ யாரை இறுதிவரை உன்னுடன் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகி-றாயோ, அவரைப் பத்தில் ஒரு பங்காகக் கூட பார்க்க முடியாமல் செய்துவிடும் இந்த வாழ்க்கை.

இன்று நீ எதை, "வேண்டும்" என்று பிடிவாதமாக இருக்கிறாயோ, ஒரு நாள் அவற்றை எல்லாம், "வேண்டாம்" என்று ஒதுக்கித் தள்ள வைத்துவிடும் இந்த வாழ்க்கை. நீ, "இதுதான் நிஜம், இதுதான் எதிர்காலம்" என்று நம்பி வந்தவற்றை, இவை எல்லாம் கனவு" என்று சொல்லி, உன்னை நகர வைத்துவிடும் இந்த வாழ்க்கை.

வாழ்க்கையை மிக எளிமையாக எண்ணி விடாதே. நீ வேண்டும் என்று நினைப்பவற்றை வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளும்ஞ வேண்டாம் என்று ஒதுக்கியவற்றை வேண்டும் என்று திணிக்கும். எல்லாம் உன் விருப்பப்படியே நடக்க வேண்டும் என்று நினைத்தால், காலம் தன் இ'டப்படி ஒரு ஆட்டம் ஆடி, இதுதான் வாழ்க்கை" என்று புரிய வைத்துவிடும். நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், நடக்க வேண்டியவை இயல்பாகவே நடக்கும், எளிதாக எடுத்துக்கொள். ரமண மகரிஷீ சொன்னது போல, நடக்க வேண்டியது நடக்கும்ஞ நீ பார்வையாளனாக இரு."

## ஒரு வேலையை எளிதாக செய்து முடிக்க என்ன வழி?

- எஸ்.அலமேலு, கள்ளக்குறிச்சி


நேற்று நீங்கள் செய்தவற்றை ஒன்று விடாமல் பட்டியலிட முடியுமா? முடியாது. ஏனெனில், நீங்கள் செய்த செயல்களில், இரண்டு அல்லது மூன்று சதவீதம் மட்டுமே, உங்கள் முழு கவனத்துடன் செய்யப்பட்டவை. மற்றவை அனைத்தும், கவனமின்றி, மனம் ஒருமுகப்படாமல் செய்யப்பட்டவை. நீங்கள் வேலை மும்முரத்தில் இருப்பதைவிட, குருட்டுச் சிந்தனையில், அதாவது மனம் சிதறிய நிலையில் இருக்கும் நேரமே அதிகம். இப்படியிருக்க, நேரம் எப்படி உங்களுக்கு போதுமானதாக இருக்க முடியும்? மனித மனம், மிகப் பெரும் சக்தி வாய்ந்தது. அதை முறையாகப்

பயன்படுத்துவது எப்படி என்று தெரிந்து கொண்டால், அற்புதமான பல செயல்களைச் செய்ய முடியும்.

நேரம் என்பது இரண்டாம் பட்சமே. ஆனால், இப்போது கிடைக்கும் நேரத்தின் பெரும்பகுதியை, என்ன செய்கிறோம் என்று உணராமலேயே வீணாக்குகிறோம். இதனால், நாம் எதிர்பார்க்கும் பலன்கள் கிடைப்பதில்லை.

ஆண்ட்ரூ கார்னகி என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் அமெரிக்காவின் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவர்.

அவர், குறுகிய காலத்தில் மிகப் பெரும் செல்வத்தைச் சேர்த்தது, அமெரிக்க அரசுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. புலன் விசாரணைகள் நடத்தியும், அவர்கள் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.



பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆண்ட்ரூ கார்னகியை நேரடியாகச் சந்தித்து, □எப்படி இவ்வளவு குறுகிய காலத்தில், இவ்வளவு செல்வ-த்தைச் சேர்த்தீர்கள்?” என்று கேட்டனர்.

கார்னகி பதிலளித்தார், □நான் தொடர்ந்து ஐந்து நிமிடங்களுக்கு, என் மனதை ஒருமுகப் படுத்தி வைத்திருக்க முடியும். உங்களால் முடியுமா?”

அவர்கள் முயற்சித்து, தோல்வியடைந்தனர்.

கார்னகி மேலும், “உங்களால் ஐந்து நிமிடங்கள் கூட மனதை ஒருமுகப்படுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட மனநிலையுடன் நீங்கள் அமெரிக்காவை எப்படி ஆள முடியும்?” என்று கேட்டு, வந்தவர்களை வாயடைக்க வைத்தார்.

உங்கள் மனதை ஒரு செயலில் முழுமையாகத் தயார்படுத்தி, தவறாமல் செயல்படுத்தினால், எந்தத் தொழிலையும் எளிதாகச் செய்து முடிக்க முடியும்.

## தாழ்வு மனப்பான்மையைப் போக்கிக் கொள்ள உதவும் வழிமுறைகளைக் கூறுங்கள்...

- அ.ரஹ்மான் சேட், நாகர்கோவில்

1.உங்களை நீங்களே அழகாக ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் அழகு என்று முதலில் நீங்களே நம்புங்கள். அழகு என்பது நிறத்துடன் தொடர்புடையது அல்ல என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள். மற்றவர்கள் உங்களைப் புகழ்ந்தாலும், விமர்சித்தாலும், □நான் அழகு” என்ற எண்ணத்தை, உங்கள் மனதில் உறுதிப்படுத்துங்கள். உங்களை நீங்களே ரசித்து, தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

2.மொழி குறித்த கவலையை விடுங்கள். எந்த மொழியையும் சரளமாகப் பேச முடியவில்லை என்று கவலைப்படாதீர்கள். உங்களை நகைச்சுவை யாகப் பேசுபவர்களை எதிர்கொள்ள தைரியமாக இருங்கள். □இங்கு பலருக்கு அவர்களின் தாய்மொழியைக் கூட சரியாகப் பேசத் தெரியவில்லை” என்று துணிச்சலுடன் கூறுங்கள். மொழி ஒரு கருவி மட்டுமேளூ உங்கள் எண்ணங்களை வெளிப் படுத்துவதற்கு, உங்கள் தன்னம்பிக்கையே முக்கியம்.

3.குறைகளைக் கற்று முறியடியுங்கள். யாராவது உங்களால் ஒரு செயலைச் செய்ய முடியாது, அல்லது உங்களுக்கு ஏதோ தெரியவில்லை என்று கூறினால், அதை ஒரு சவாலாக எடுத்துக்கொள்ளுங்கள். அந்தக் குறையை விரைவில் கற்று, அதைச் செய்து முடிக்க விடாமுயற்சியுடன் உழை-யுங்கள். உங்கள் திறமைகளை வளர்த்து, விமர்சனங்களை உங்களுக்கு ஆதரவாக மாற்றுங்கள்.

4.வாழ்க்கையை சோகமாகப் பார்க்காதீர்கள். என் வாழ்க்கை சோகம் நிறைந்தது” என்று நினைப்பதைத் தவிர்க்கவும். உண்மையில், எவருக்கும் முழுமையாக நிறைவான வாழ்க்கை அமைவதில்லை. எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் சவால்கள் உள்ளன. உங்கள் வாழ்க்கையின் நேர்மறையான பகுதிகளைப் பார்த்து, அவற்றைப் பயன்படுத்தி முன்னேறுங்கள்.

5.மற்றவர்களைப் பற்றிய பயத்தை

விடுங்கள். எதிரில் நிற்பவர் எல்லாமே அறிந்தவர், உங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று ஒரு போதும் நினைக்காதீர்கள். இந்த எண்ணம் உங்களைத் தயங்கச் செய்து, உங்கள் கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்த முடியாமல் செய்யும். உங்களுக்கு உள்ள அறிவையும், திறமையையும் நம்புங்கள்ளூ உங்கள் கருத்துகளைத் தைரியமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

6.கேள்வி கேட்கத் தயங்காதீர்கள். கேள்வி கேட்பதற்கு மொழிப்புலமை அவசியம் என்று நினைக்காதீர்கள். உலகில் மாற்றத்தை ஏற்படுத்திய பல கேள்விகள், மொழிப்புலமை இல்லாதவர்களால், அவர்களுக்குத் தெரிந்த எளிய வார்த்தைகளில் கேட்கப்பட்டவை. உங்கள் எண்ணங்களைத் தெளிவாக வெளிப் படுத்தினால், மொழியின் எளிமை ஒரு தடையாக இருக்காது.

7.தனிமையில் உணர்ச்சிகளைக் கை-யாளுங்கள். அழ வேண்டிய தருணங்களில் தனியாக அழுங்கள். உங்கள் துயரத்தில் யாரும் உங்களுடன் இணைந்து அழ வருவதில்லை என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். கண்ணீரில் உங்கள் துக்கத்தைக் கரைத்து, அதைத் தூர எறிந்துவிட்டு, மனதைத் தெளிவாக்கி முன்னேறுங்கள். உங்கள் உணர்ச்சிகளை, நீங்களே கையாளக் கற்றுக்கொள்ளுங்கள்.

8.நிராகரிப்பைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் அன்பு எந்த இடத்தில் நிராகரிக்கப்பட்டாலும், அது உங்களுக்கு இழப்பு அல்லளூ நிராகரித்தவருக்கே இழப்பு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் மதிப்பை மற்றவர்களின் ஏற்பு அல்லது நிராகரிப்பு தீர்மானிக்க முடியாது. உங்களை நீங்கள் மதித்து, உங்கள் பயணத்தைத் தொடருங்கள்.

**எம்.பி.யாக பொறுப்பேற்ற கமல்ஹாசன் அவர்களுக்கு வாழ்த்துக்கள்**



**சின்னத்திரை நடிகர் புகழ் நாயகனாக நடித்துள்ள ஷமிஸ்டர் ஜூ கீப்பர்’ படம் வரும் ஆகஸ்ட் 1 ஆம் தேதி வெளியாக உள்ளது.**




சின்னதிரையில் குக் வித் கோமாளி உள்ளிட்ட காமெடி நிகழ்ச்சியில் தனது திறமையை நிரூபித்து அதன்மூலம் திரைப்படங்களில் வாய்ப்பு பெற்றவர் நடிகர் புகழ். தமிழ் சினிமாவில் நகைச்சுவை வேடங்களில் நடித்து வந்த இவர் சசிகுமார் நடிப்பில் வெளியாகிப் வெற்றி பெற்ற அயோத்தி படத்தில் சிறப்பாக நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார்.

மேலும் கௌதம் கார்த்திக் நடித்த 1947 என்ற படத்தில் வாய் பேச முடியாதவர் கதாபாத்திரத்தில் இவரது நடிப்பு வரவேற்பைப் பெற்றது. தற்போது கதையின் நாயகனாக “மிஸ்டர் ஜூ கீப்பர் “ என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை ஜே. சுரேஷ்‘ இயக்கியுள்ளார். ஜே. சுரேஷ்‘ வேலை, என்னவளே, ஜூனியர் சீனியர் ஆகிய படங்களை இயக்கியுள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு தற்போது புகழ் நடிக்கும் “மிஸ்டர் ஜூ கீப்பர்“ படத்தை இயக்கியுள்ளார்.

இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசை அமைத்துள்ளார். படத்தின் டிரெய்லர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இப்படத்தை ஜே 4 ஸ்டுடியோஸ் ராஜ ரத்தினம் தயாரித்துள்ளார். E5, Entertainment J ஜெயகிரு‘ணன் வெளியிடுகிறார். இப்படத்தில் அனிமேஷன் இல்லாமல், உண்மையான புலியை நடிக்க வைத்திருப்பதாகப் படக்குழு அறிவித்தனர். குக் வித் கோமாளி நிகழ்ச்சியின் மூலம் புகழுக்கு ரசிகர்கள் பட்டாளம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சின்னத்திரை நடிகர் புகழ் நாயகனாக நடித்துள்ள “மிஸ்டர் ஜூ கீப்பர்“ படம் வரும் ஆகஸ்ட் 1 ஆம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. குழந்தைகளைக் கவரும் வகையில் இப்படம் எடுக்கப்பட்டுள்ளதால் “மிஸ்டர் ஜூ கீப்பர்“ குழந்தைகள் கொண்டாடும் படமாக இருக்கும்.

## உண்மை சம்பவத்தை வைத்து உருவாகியிக்கும் " போகி "
## ஆகஸ்ட் 1ஆம் தேதி வெளியாகிறது.




ஆகஸ்ட் 1 ஆம் தேதி வெளியாகும் " போகி "

ஏ ஐ குளோபல் நெட்வொர்க்ஸ் பட நிறுவனம் தயாரித்திருக்கும் படத்திற்கு "போகி "என்று பெயரிட்டுள்ளனர்

இந்தப் படத்தில் நபி நந்தி, சரத், லப்பர் பந்து படத்தில் சிறப்பான தோற்றத்தில் நடித்த சுவாசிகா, பூனம் கவூர், வேலாராமமூர்த்தி, சங்கிலி முருகன், மொட்டை ராஜேந்திரன், எம். எஸ். பாஸ்கர், முரு ஸ்டார் மற்றும் பலர் நடித்திருக்கின்றனர்.

ஒளிப்பதிவு - ராஜா C சேகர்
இசை - மரியா மனோகர்
பாடல்கள் - சினேகன்
வசனம் - S.T. சுரேஷ்குமார்
எடிட்டிங் - சுரேஷ்' அர்ஸ்
கலை இயக்கம் - A. பழனிவேல்
ஸ்டண்ட் - அன்பறிவ், மிராக்கிள் மைக்கேல்,
நடனம் - அசோக் ராஜா
மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ்
தயாரிப்பு - V i குளோபல் நெட்வொர்க்ஸ்

கதை, திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார் - S. விஜயசேகரன்.

படம் பற்றி இயக்குனர் ளு. விஜயசேகரன் பகிர்ந்தவை....

உண்மை சம்பவத்தை அடிப்படையாக கொண்டு இந்த படத்தை உருவாக்கி இருக்கிறேன்.



சென்னை நகரம் தற்போது உலகத்தரம் வாய்ந்ததாகவும், தொழில்நுட்பம் வானத்தை விட்டும் அளவிற்கு வளர்ந்துள்ள இந்த சூழ்நிலையில் Ai என்ற புதிய தொழில்நுட்பம் மக்களை மிரட்டும் சூழ்நிலையில் பெண் பிள்ளைகளை பெற்ற தாய், தந்தை,சகோதரர்கள் நாளுக்கு நாள் பதட்டத்துடன் வாழும் நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.



இப்படிப்பட்ட சூழ்நிலையில் சுமார் 6000 அடி உயரத்தில் எந்த தொழில்நுட்ப வளர்ச்சியும் இல்லாத மலை கிராமத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றனர் சைக்கிள் கூட செல்ல முடியாத இந்த மக்களுக்கு கல்வியும் மருத்துவமும் கனவாக இருக்கிறது அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த நாயகன் அழகர் தனது தங்கை கவிதா மூலமாக தனது கிராமத்தின் மருத்துவ தேவையை சரி செய்ய விரும்புகிறான் சில கிலோமீட்டர் மலையில் கால்நடையாக சென்று படித்துவிட்டு வீடு திரும்பி மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்று மருத்துவக் கல்லூரிக்கு செல்ல அந்த மலை கிராமமே பெரும் கனவோடு வழி அனுப்பி வைக்கிறார்கள்.

இறுதியில் கவிதா மருத்துவம் படித்து




கிராம மக்களுக்கு சேவை செய்தாரா என்ன நடந்தது என்பதே இந்த படத்தின் திரைக்கதை.


படம் துவங்கி கிளைமாக்ஸ் வரை விறுவிறுப்பான திரைக்கதை இருக்கும்.

இன்றைய சூழ்நிலையில் பெற்றோர்கள் பொதுமக்கள் அனைவரும் இந்த படத்தை பார்க்க வேண்டும் என்கிறார் இயக்குனர் ளு.விஜயசேகரன்.

ஆகஸ்ட் 1 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ள இந்த படத்தை PGP எண்டர்பிரைசஸ் நிறுவனம் சார்பில் P. G. பிச்சைமணி இந்தியா முழுவதும் வெளியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சினிமா தயாரிப்பதை தான்டி வெளியிடுவதில் தான் பல்வேறு சிக்கல்களை தமிழ் சினிமா சந்தித்து வருகிறது இந்த சூழ்நிலையில் PGP எண்டர்பிரைசஸ் ீ. G. பிச்சைமணி இந்த போகி படத்தை தொடர்ந்து இது போன்ற நல்ல சினிமாக்களை தொடர்ந்து வெளியிட இருக்கிறார் என்பது தமிழ் சினிமாவிற்கு கிடைத்த பெரிய பலம்.




**சுவாராஸ்யமாக கொடுத்துள்ளார் பாராட்டுக்கள்**

# நடிகர் உதயா நடிக்கும் "அக்யூஸ்ட்" படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு




நடிகர்கள் உதயா - அஜ்மல் - யோகி பாபு முதன்மையான வேடங்களில் நடித்திருக்கும் "அக்யூஸ்ட்" திரைப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது.

பிரபு ஸ்ரீநிவாஸ் இயக்கத்தில் உருவாகியுள்ள "அக்யூஸ்ட்" திரைப்படத்தில் உதயா, அஜ்மல், யோகி பாபு, ஜான்விகா, பிரபாகர், டானி, சுபத்ரா உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ஐ. மருதநாயகம் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்தத் திரைப்படத்திற்கு நரேன் பாலகுமார் இசையமைத்திருக்கிறார். ஆக்ஷன்-ஃ. பேமிலி என்டர்டெய்னராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை ஜேசன் ஸ்டுடியோஸ் - சச்சின் சினிமாஸ்- ஸ்ரீ தயாகரன் சினி புரொடக்ஷன் மற்றும் மை ஸ்டுடியோஸ் ஆகிய நிறுவனங்கள் சார்பில் உதயா - "தயா" என். பன்னீர்செல்வம் - எம். தங்கவேல் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள்.

**தயாரிப்பாளர் பன்னீர்செல்வம் பேசுகையில்,** ""இப்படத்தின் பணிகளை இந்த ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் தேதியன்று தொடங்கி, ஆகஸ்ட் ஒன்றாம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியிடுகிறோம். ஒரு படத்தை இவ்வளவு விரைவாக நிறைவு செய்து திரையரங்குகளில் வெளியிடுவதற்காக முழு ஒத்துழைப்பினை வழங்கிய நடிகர் உதயாவிற்கு என் முதல் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படத்தின் கதையை இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ், உதயா மூலமாக எங்களை சந்தித்து சொன்னார். அவர் சொன்ன கதை பிடித்துப் போனதால், அடுத்த நாளே படத்தின் பணிகளை பூஜையுடன் தொடங்கினோம். உதயாவை தொடர்ந்து கதையில் முக்கியமான வேடத்தில் நடிக்க நடிகர் அஜ்மல் மற்றும் யோகி பாபு ஒப்பந்தமானார்கள். இவர்களைத் தொடர்ந்து நாயகி ஜான்விகா, பவன், பிரபாகர், பெங்கள□ரு டானி, சுபத்ரா என அந்தந்த கதாபாத்திரத்திற்கு பொருத்தமானவர்களை இயக்குநரும் உதயாவும் தேர்வு செய்தனர்.

குறிப்பாக யோகி பாபு தலைவர் ரஜினி படத்தில் நடித்துக்கொண்டிருந்த போது உதயாவிற்காக பதினான்கு நாட்களை ஒதுக்கி முழு ஒத்துழைப்பை வழங்கினார்.

ஒளிப்பதிவாளர் மருதநாயகம், இசையமைப்பாளர் நரேன் பாலகுமார், ஸ்டண்ட் மாஸ்டர் சில்வா, எடிட்டர் "யாம் என திறமையான தொழில்நுட்பக் கலைஞர்களும் தங்களின் முழு ஒத்துழைப்பை வழங்கினார்கள். இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நடிகர் உதயாவின் கடும் உழைப்பை இந்த படத்தில் நாங்கள் நேரில் பார்த்திருக்கிறோம். அவருடைய கடும் உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என ரசிகர்களிடமும், ஊடகங்களிடமும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் படத்தை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்,"" என்றார்.

**படத்தொகுப்பாளர் ஷ்'யாம் பேசுகையில்,** ""எடிட்டர் போன்ற தொழில்நுட்ப கலைஞர்களுக்கு திரில்லர் ஜானர் ஆக்ஷன் ஜானர் படங்களுக்கு படத்தொகுப்பு செய்ய வேண்டும் என்பது கூடுதல் உற்சாகத்தை அளிக்க கூடியது. அந்த வகையில் அக்யூஸ்ட் திரைப்படத்தின் திரைக்கதை படத்தொகுப்பின் போது உற்சாகத்தை அளித்தது. இந்த திரைப்படம் சீட் எட்ஜ் திரில்லராக உருவாகி இருக்கிறது. இந்தப் படத்தில் உதயாவும், இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸூம் ஒன்றிணைந்து பணியற்றிருக்கிறார்கள். நாங்கள் இந்தப் படத்தின் திரைக்கதையின் வேகத்தை

குறைப்பதற்காக சில உத்திகளை கையாண்டிருக்கிறோம். ஏனெனில் இந்தப் படத்தின் திரைக்கதை மிக வேகமாக இருக்கும். இது போன்றதொரு படத்திற்கு படத்தொகுப்பு பணிகளை செய்வதற்கு வாய்ப்பளித்த எடிட்டர் பிரவீண் சாருக்கும், உதயா சாருக்கும், இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் சாருக்கும் நன்றி. இப்படத்தின் இசையும் மிகப் பிரமாதமாக இருக்கிறது. இந்தப் படம் உங்கள் அனைவரையும் கவரும் வகையிலான டீசன்டான சீட் எட்ஜ் திரில்லர் படம். அனைவரும் ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்,““ என்றார்.

**நடிகர் டானி பேசுகையில்,** ““ஓ மரியா பாடலில் நடிகை ரம்பாவுடன் நடனமாடிய பாடல் 1999ம் ஆண்டில் வெளியானது. அதன் பிறகு மீண்டும் இந்த படத்தில் நடிக்கிறேன். இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் சினிமா வேண்டாம் என்று அமெரிக்காவிற்கு சென்றார். அவரிடம் கேட்டபோது சின்ன பிரேக் எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றார். ஆனால் நான் அவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டேன். அதன் பிறகு அவர் எனக்கு போன் செய்து உதயா நடிக்கும் படத்தை இயக்க வாய்ப்பு வந்துள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இந்தத் தருணத்தில் விஜய் டிவியில் “ஓ மரியா..“ பாடலை ரீ கிரியேட் செய்தனர். அதற்காக பெங்களூரில் இருந்து சென்னை வந்து நடனம் ஆடினேன். அந்தத் தருணத்தில் இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸிடமிருந்து அழைப்பு வந்தது. நான் நேராக இப்படத்தின் படப்பிடிப்பு தளத்திற்கு சென்றேன். அங்கு எனக்கு உதவி காவல் ஆய்வாளர் வேடத்தில் நடிக்க வேண்டும் என சொன்னார். ஒவ்வொரு கலைஞனுக்கும் விமான நிலையத்தில், பொதுவெளியில், வணிக வளாகத்தில் ரசிகர்கள் சந்தித்து, “உங்கள் படத்தை நான் பார்த்திருக்கிறேன்“ என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும், அது அந்த கலைஞனுக்கு மிகப்பெரிய போதையை தரும். ஆனால் என்னை யாரும் அங்கீகரிக்கவில்லை, அடையாளப்படுத்தவில்லை. அதற்காக ஏங்கிக் கொண்டிருந்தேன். இந்த தருணத்தில் உதவி காவல் ஆய்வாளர் வேடத்தில் நடிக்க வேண்டும் என்றால் தலை முடியை கட் செய்ய வேண்டும் என்று சொன்னார். நான் யோசித்தேன். “மின்னலே“ படத்தில் நாகேஷ் உடன் நடித்தேன். “காதலர் தினம்“ படத்தில் கவுண்டமணியுடன் நடித்திருக்கிறேன். “கவிதை“ படத்தில் வடிவேலுவுடன் நடித்தேன். பல காமெடி நடிகர்களுடன் நடித்திருக்கிறேன். அந்த வகையில் யோகி பாபு உடன் நடிக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்காகவும் இந்த படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டேன். யோகி பாபு உடன் மட்டுமல்லாமல் அஜ்மல் - உதயா என அனைவரிடமும் இணைந்து நடிக்க வேண்டும் என்பதால் இந்தப் படத்தில் நடித்தால் மீண்டும் பெரிய அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நடிக்க ஒப்புக்கொண்டேன். தலைமுடியை கட் செய்யவும் சம்மதித்தேன். இந்தப் படத்தில் என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்டாக நடித்திருக்கிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தயாரிப்பாளர் சேது பேசுகையில்,** ““நாங்கள் பெரிதாக எதிர்பார்த்து முதல் முதலாக தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் படம் இது. இதற்கு உதயா தான் காரணம். அவருடன் நடைபெற்ற ஒரு சாதாரண சந்திப்பு தான் இப்படத்தில் எங்களை இணைய வைத்தது. இயக்குநர் பிரபு ஸ்ரீனிவாஸ் எங்களிடம் என்ன கதையை சொன்னாரோ, அதை அப்படியே எடுத்திருக்கிறார். இந்தப் படத்திற்கு எல்லாம் பாசிட்டிவ் ஆகவே அமைந்தது. இந்தப் படத்தின் கதை தனக்கு என்ன தேவையோ, அதை அதுவே இழுத்துக் கொண்டது . நாங்கள் எதையும் செய்யவில்லை. அதை என்ன கேட்டதோ அதை நாங்கள் செய்து கொடுத்தோம். படம் சிறப்பாக வந்திருக்கிறது. படத்தில் பணியாற்றிய நடிகர்களுக்கும் , நடிகைகளுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்,““ என்றார்.

**இசையமைப்பாளர் நரேன் பாலகுமார் பேசுகையில்**, ““அக்யூஸ்ட் படத்தில் பணியாற்றியது எனக்கு நல்லதொரு அனுபவம். ஜனவரியில் தான் இப்படத்திற்கான பாடல்களை உருவாக்கினோம். ஆறு மாதத்திற்குள் ஃபர்ஸ்ட் காப்பி ரெடி ஆகிவிட்டது. நான் இந்த குழுவில் இணைந்ததற்கு முக்கியமான காரணம் உதயா தான். அவருக்கு என்னுடைய முதல் நன்றி. இந்தப் படத்தில் மூன்று பாடல்கள் இடம் பெற்று இருக்கின்றன. இந்தப் படத்தின் திரைக்கதையை மேம்படுத்தும் வகையில் பின்னணி இசை

அமைத்திருக்கிறேன் என நம்புகிறேன். நீங்கள் அனைவரும் ஆகஸ்ட் முதல் தேதியன்று இப்படத்தை திரையரங்குகளில் பார்த்து உங்களது விமர்சனத்தை முன்வைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்,““ என்றார்.

**இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் பேசுகையில்,**

““கன்னடத்தில் திரைப்படங்களை இயக்கியிருந்தாலும் என்னுடைய திரையுலக வாழ்க்கை தமிழில் தான் தொடங்கியது. சுந்தர் சி - தனுஷ் - அர்ஜுன் - ஆகியோர் நடித்த படங்களுக்கு நடன இயக்குநராக பணியாற்றி இருக்கிறேன். கிட்டத்தட்ட 400 பாடல்களுக்கு மேல் நடன இயக்குநராக பணியாற்றிவிட்டு, கன்னடத்தில் திரைப் படத்தை இயக்குவதற்கான வாய்ப்பு கிடைத்தவுடன் அங்கு சென்று படத்தை இயக்கினேன். ஒரே தயாரிப்பாளருடன் தொடர்ந்து ஐந்து திரைப்படங்களை இயக்கினேன். அதன் பிறகு சொந்தமாக ஒரு படத்தை தயாரித்து இயக்கினேன். இது என்னுடைய இயக்கத்தில் வெளியாகும் ஏழாவது படம். ஆனால் தமிழில் முதல் படம்.

கன்னடத்தில் ஆக்ஷன் ஃபிலிம் டைரக்டர் என்ற பெயரை சம்பாதித்து இருக்கிறேன். தமிழில் அறிமுகமாகும் போது மிக பிரம்மாண்டமான படத்தை இயக்க வேண்டும் என்று தான் எண்ணியிருந்தேன். இதற்காக லாரன்ஸ், விஷால் போன்ற சில ஹீரோக்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறேன். ஆனால் எதுவும் சாத்தியமாகவில்லை. இந்தத் தருணத்தில் என் குடும்ப உறுப்பினர்கள் “நீங்கள் அப்படி நினைக்க கூடாது. நீங்கள் கன்னடத்தில் படத்தை இயக்கும் போது சின்ன படமாகத் தான் இருந்தது. ஆனால் அந்த படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றியை பெற்றது. அதனால் நீங்கள் இயக்கும் படம் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற வேண்டும் என நினைத்து உருவாக்குங்கள்“ என ஆலோசனை சொன்னார்கள். அதன் பிறகு ஆறு மாதம் அமெரிக்காவிற்கு சென்று விட்டேன்.

அதன் பிறகு பிஆர்ஓ நிகில் முருகன் தான் இந்த அக்யூஸ்ட் படத்திற்கு பிள்ளையார் சுழி போட்டார். அவர்தான் உதயா கதை கேட்டுக் கொண்டிருக்கிறார். அவரை சந்தித்து கதையை சொல்லுங்கள் என்றார். அதன் பிறகு அவரை சந்தித்து கதையைச் சொன்னேன். கதையை முழுவதுமாக கேட்டுவிட்டு, கதை நன்றாக இருக்கிறது. குறிப்பாக என்னுடைய கேரக்டர் நன்றாக இருக்கிறது. நாளை தயாரிப்பாளரை சந்திக்கிறோம் என்றார். அடுத்த நாள் தயாரிப்பாளர்கள் பன்னீர்செல்வம் - தங்கவேல்- உதயா - ஆகியோர் இருந்தனர். தயாரிப்பாளர்களுக்கும் கதை பிடித்திருந்தது. ஆனால் அனைவரும் பட்ஜெட் அதிகம் என சொன்னார்கள். ஆனால் படப்பிடிப்பு நடைபெற்ற 60 நாட்களிலும் எந்த குழப்பமும் இல்லாமல் நான் கேட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து படப் பிடிப்பை நிறைவு செய்தனர். எனக்கு கிடைத்த தொழில்நுட்ப கலைஞர்களும் திறமை யானவர்கள். அதனால் படத்தை உருவாக்குவதற்கு எனக்கு முழு சுதந்திரம் இருந்தது. ஒன்றரை கோடி ரூபாய்க்கு பஸ் ஒன்றை விலைக்கு வாங்கி, அதனை படப்பிடிப்புக்கு பயன்படுத்திய பின் ஸ்கிராப்பிற்கு அனுப்பினோம். இதற்கும் உதயா தான் முழு காரணம்.

இந்தக் கதையில் நாயகனுக்கு இணையான கதாபாத்திரத்தில் அஜ்மல் நடித்தார். அவருக்கு கதை சொன்ன தருணத்திலிருந்து தற்போது வரை முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்.

கதையில் இடம்பெறும் மற்றொரு கதாபாத்திரத்திற்கு யோகி பாபு விடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் கதையைக் கேட்ட அவர் நடிக்க ஒப்புக்கொண்டதுடன் நாங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தொடர்ந்து 14 நாட்கள் கால்ஷீட் கொடுத்து ஒத்துழைப்பு அளித்தார்.

இந்தப் படத்திற்கு நரேன் பாலகுமார் இசையமைத்திருக்கிறார். என்னுடைய உறவினர் இசையமைப்பாளராக இருந்தாலும் இந்தப் படத்திற்கு புது இசையமைப்பாளர் வேண்டும் என விரும்பினேன் இதற்காக உதயா அவருடைய “உத்தரவு மகாராஜா“ படத்திற்கு இசையமைத்த நரேன் பாலகுமாரை அறிமுகப்படுத்தினார். அவரது பாடலைக் கேட்டவுடன் பிடித்து விட்டது. இந்தப் படத்தில் அவரின் இசையில் உருவான பாடல்கள் எனக்கும் பிடித்தது. என் மகன்களுக்கும் பிடித்தது. ஒரு பாடலை சிறிய வயதில் இருக்கும் பிள்ளைகள் பாடினால் அந்தப் பாட்டு ஹிட் ஆகும். பாடல்களைப் போல் பின்னணி இசையிலும் நரேன் மெஸ்மரைஸ் செய்திருக்கிறார். இந்தப் படத்தைப் பற்றி நான் எதையும் மிகையாக சொல்லவில்லை, நீங்கள் படம் பார்த்தால் புரியும்.

இந்தப் படம் அனைவரையும் மெஸ்மரைஸ் செய்யும். இந்த படத்தைப் பற்றிய ஏதேனும் எதிர்பார்ப்பு இருந்தால் அதைவிட அதிகமாகவே இருக்கும். திரைக்கதையில் யாரும் யூகிக்காத

திருப்பங்கள் இருக்கும். படம் தொடக்கம் முதல் இறுதி வரை கண் இமைக்காமல் பார்க்கும் படி இருக்கும்," என்றார்.

**நாயகி ஜான்விகா பேசுகையில்,** ""இது என்னுடைய முதல் தமிழ் திரைப்படம். "அக்யூஸ்ட்" ஆகஸ்ட் 1ம் தேதி வெளியாகிறது. உங்கள் அனைவரின் ஆதரவும் அன்பும் தேவை. இந்த படத்தில் நடிப்பதற்கான வாய்ப்பை அளித்த தயாரிப்பாளருக்கும் , இயக்குநருக்கும், உதயாவிற்கும் நன்றி. இந்தப் படத்தில் அழகான காதல் கதை இருக்கிறது. அற்புதமான பாடல்கள் உள்ளன. சில்வா மாஸ்டர் அமைத்த சண்டை காட்சிகளும் உள்ளன. யோகி பாபுவின் காமெடி இருக்கிறது. அத்துடன் இந்தத் திரைப்படம் ஒரு ஃபேமிலி என்டர்டெய்னர். அதனால் அனைவரும் இந்தப் படத்தை திரையரங்கத்திற்கு சென்று பார்த்து ரசித்து ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்,"" என்றார்.

**நடிகர் அஜ்மல் பேசுகையில்,** ""ஒருவர் வெற்றி பெற வேண்டும் என்று துணிந்து செயலில் ஈடுபட்டால், அவருக்கு இந்த உலகமே துணை நிற்கும் என்பார்கள். இதற்கு மிகப்பெரிய உதாரணம் உதயா. அவர் இந்த படத்திற்காக எவ்வளவு கடினமாக உழைத்தார் என்பதை படத்தின் பணிகள் தொடங்கிய முதல் நாளிலிருந்து எனக்குத் தெரியும்.

இந்தப் படத்தில் பணியாற்றிய நடிகர்களும் நடிகைகளும் தொழில்நுட்ப கலைஞர்களும் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து பணியாற்றினார்கள். இந்தப் படத்திற்கு கடவுளின் மிகப்பெரிய ஆசீர்வாதம் இருக்கிறது. அந்த ஆசி இன்று வரை தொடர்கிறது.

இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் என் கதாபாத்திரத்தை மட்டுமல்ல மலர் என்ற ஹீரோயின் கதாபாத்திரத்தையும் உதயாவின் கதாபாத்திரத்தையும் நன்றாக செதுக்கியிருந்தார். படத்தில் திறமையான தொழில்நுட்ப கலைஞர்களும் பணியாற்றியிருக்கிறார்கள்.

"அஞ்சாதே" படத்தில் பணியாற்றிய போது எனக்கு ஒரு பாசிட்டிவ் எனர்ஜி கிடைத்தது. "கோ" படத்தில் பணியாற்றிய போதும் பாசிட்டிவ் எனர்ஜி கிடைத்தது அதேபோன்று பாசிட்டிவ் எனர்ஜி இந்தப் படத்தில் பணியாற்றிய போதும் எனக்கு கிடைத்தது. அதனால் இந்தப் படம் மிகப்பெரிய வெற்றி படமாக அமையும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தப் படத்திற்கு ஊடகங்களில் பேராதரவு தேவை. அதை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்,"" என்றார்.

**நாயகன் உதயா பேசுகையில்,** ""மூன்றரை வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அக்யூஸ்ட் " திரைப்படத்தில் நடித்திருக்கிறேன். சினிமாவில் அறிமுகமாகி 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று வரை எனக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஊடகங்களுக்கு என் முதல் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மேடை எனக்கு மிகவும் பிடித்த மேடை. நிறைய போராட்டங்களுக்குப் பிறகு சினிமாவை நிறைய நேசித்ததன் காரணமாக இங்கு நின்று கொண்டிருக்கிறேன். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் மன உளைச்சலுக்கும் ஆளாகி இருக்கிறேன். அதன் பிறகு மீண்டும் வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் பயணிக்க தொடங்கிய போது கேட்ட கதை தான் இந்த அக்யூஸ்ட் படத்தின் கதை.

இன்றைய தமிழ் சினிமாவில் கன்டென்ட் தான் முக்கியம். அதற்காக நல்ல கன்டென்டுக்காக காத்திருந்தேன். நான் இன்று வரை எந்த படமாக இருந்தாலும் தியேட்டருக்கு சென்று பார்த்து ரசிப்பவன். எது ரசிகர்களுக்கு பிடித்திருக்கிறது, பிடிக்கும் என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்ற வகையில் தான் கதையை கேட்கத் தொடங்கினேன்.

இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் முதலில் கன்னடத்தில் வெளியான படம் ஒன்றை தமிழில் ரீமேக் செய்யலாம் என்று சொன்னார். அது டார்க் காமெடி, எனக்கு ஒத்து வராது என்று சொல்லி புதிதாக கன்டென்ட் இருந்தால் அதை சொல்லுங்கள் என்றேன் . அத்துடன் எனக்கான பட்ஜெட் இதுதான் என்றும் சொன்னேன். ஆனால் அவர் சொன்ன அக்யூஸ்ட் கதை பெரிய பட்ஜெட் படம். இதை தயாரிப்பாளரிடம் சொன்னபோது அவர்கள் தான் இதற்கு ஆதரவாக இருந்தார்கள். அதனால் தான் இந்த படம் உருவானது.

இயக்குநர் பிரபு ஸ்ரீநிவாஸ் கிளாரிட்டியான டைரக்டர். அவருக்கு தமிழ் சினிமாவில் மிகப்பெரும் எதிர்காலம் இருக்கிறது. அத்துடன் பிரபு ஸ்ரீநிவாஸ் தயாரிப்பாளர்களின் இயக்குநராகவும் இருக்கிறார்.

இந்தப் படத்தினை பத்திரிகையாளர்களாகிய நீங்கள் பார்த்து பாராட்டு தெரிவித்து விட்டால், தமிழக மக்கள் ஏற்றுக் கொண்டு வெற்றி பெற செய்து விடுவார்கள்.

இன்றைய சூழலில் ஒவ்வொரு படத்திற்கும் விமர்சனம் அவசியம் தேவை. சினிமாவிற்கு மூன்று நாட்கள் விமர்சனம் தேவையில்லை என்று சொன்னாலும் கூட சினிமா என்றால் விமர்சனம் வரத்தான் செய்யும். அதனால் ஒவ்வொரு சினிமாவிற்கும் விமர்சனம் அவசியம் தேவை தான். அவை ஆரோக்கியமாக இருந்தால் நன்றாக இருக்கும். சம்பந்தப்பட்ட கலைஞர்கள் தங்களது தவறை திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு உருவாகும்.

இந்தப் படத்தில் பணியாற்றிய அனைவரும் என் குடும்பத்தை போன்றவர்கள் தான். அவர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுகதை:

# வருவீகளா தாத்தா?

- எஸ்.வி.இராஜசேகரன்

“கொண்டையம்பட்டி மொதலாளி“ அப்புடீன்னு, அங்குட்டு ஆப்புட்ட ஊரு சனம் பூரா அன்பா, வாஞ்சையா கூப்புடுவாய்ங்க அவரை. “டி.ஆர்.ஏ.,“ன்னும் பாசத்தோட சொல்லுவாய்ங்க.

பேரையூருக்கும் வத்ராப்புக்கும் நடுவால இருக்குற ஒரு அழகான கிராமம்தேன் கொண்டையம்பட்டி.

சாதாரண ஒரு ஏழை வெவசாயக் குடும்பத்துல பெறந்தாரு. இவரு பெறந்த கொஞ்ச நாளுலேயே அவங்க அய்யா எறந்துட்டாரு.

வீட்டுல வறுமைன்னா வறுமை அம்புட்டு வறுமை. அம்மாவோட கண்டிப்பான வளப்புல கஷ்டப்பட்டு வேலை பாத்தாரு. பள்ளிக் கொடத்துப் பக்கமே போகாத படிக்காத மேத இவரு.

வம்பாடு பட்டு ஒழைச்சு கொஞ்சம் கொஞ்சமா சம்பாரிச்சு காடு கரைன்னு சேத்து, அந்தப் பக்கத்துக்கே மொதலாளி ஆனாரு.

கிட்டத்தட்ட அந்தக் காலத்துலயே நாலஞ்சு பம்புசெட்டு கெணறும், நூறு ஏக்கரு நெலமும் வச்சுருந்தாரு.

பண்ணையாருக மாதிரி கதருசட்டை, வேட்டி, துண்டு, கையில கொடையெடுத்துக்கிட்டு காலையில கெளம்புவாரு.

காடு கரைகளப் பூராம் சுத்திப் பாத்துட்டு, மீனாச்சிபுரம், தைலாபுரம் போயி பஞ்சாயத்தை நாயமாப் பேசி முடிச்சுட்டு, மத்தியானச் சாப்பாட்டுக்கு அவக வீட்டுக்கு வந்துருவாரு.

வீட்டுக்கு வந்து அவரு சம்சாரம் குருவம்மாட்ட, எந்தக் காட்டுல என்ன வெள்ளாமை, எவ்வளவு வெளையும்னு கையப் புடிச்ச மாதிரி சொல்வாரு. படிக்காத மேதைன்னா அவருக்குத்தேன் பொருந்தும்.

எழுமலைக்கிட்ட இருக்க சூலப்புரம்தேன் அவங்க சம்சாரம் பெறந்த ஊரு. படிக்காத மனுசிதேன். ஆனா மொதலாளிக்கு சரிக்குச் சமமா வெவசாயத்துலயும் வீட்டு நிர்வாகத்துலயும் இருப்பாக. ஆத்தத்தோ அம்புட்டுக் கெட்டிக்கார ஆத்தா.

சேடபட்டிக்கு பக்கத்துல இருக்க ஆவுல்சேரிங்கிற ஊருலருந்து, அவரு மூத்த தாரம் பெருமாயி ஆத்தாவக் கட்னாரு. காட்டுடே-



பாத்தாக. நல்ல வாஞ்சையான மனசு. ஒழப்பாளி.

தருமருன்னு ஒரு தங்கப் புள்ளயப் பெத்தாக. அதுக்கு மேல அந்தப் புண்ணியவதிக்கு மேலுக்கு ரெம்ப சேட்டமில்லாமப் போயிருச்சு.

அப்பத்தேன் மூத்த தாரம் சம்மதப்பட்டு, குருவம்மா ஆத்தாவ ரெண்டாம் தாரமா மொதலாளி கட்டுனாரு. ரெண்டு பேரும் பெரச்சனையில்லாம அம்புட்டு ராசியாக் கெடந்தாக.

அடேயப்பா, தாத்தாட்ட வந்தாச்சுன்னா எம்மந்தண்டி பெரச்சனையா இருந்துச்சுன்னாலும், சுளுவா தீத்து வப்பாரு. பெரிய ஐக்கோட்டு சர்ச் மாரி, கடவுளுக்குப் பயந்து தீர்ப்புச் சொல்வாரு.

அவரைப் பாக்க வரவகளுக்கு, காலையிலருந்து காப்பி, மோரு, கூளு, எதுனாச்சும் குடுத்துக்கிட்டே இருப்பாக.

அப்பவே, மேற்க தலமலயான் கோயில்ட்ட இருக்க பேட்டைல வச்சு, நூறு நூத்தம்பது பசு மாடுகள வளத்தாய்ங்க.

இப்பமாரி சுசைட்டிக்கு பால் ஊத்ர சோலியெல்லாம் அப்பக் கெடையாது. அவுக வீட்டுல பொழங்குனது போக, புள்ளைப் பால் கேக்குறவய்ங்க அம்புட்டு பேத்துக்கும், விடிஞ்சதுலருந்து அடைஞ்சது வரைக்கும் ஊத்திக்கிட்டே இருப்பாய்ங்க.

மொதலாளித் தாத்தா வீட்ல இருந்தார்னா, ஆளுக கூட்டம் அப்புடியே அப்பிப் போய்க் கெடக்கும்.

இன்னைக்கு சல்லிக்கட்டுன்னு, எங்கன பாத்தாலும் ஊரே கும்மரிச்சம் போடுது.

அன்னைக்கு கொண்டயம்பட்டி மொதலாளி

வளத்த சல்லிட்டு மாடு, அங்குட்டு ஆப்புட்ட ஊரு தேசம் பூராம் போயி கியாதியா பேரு வாங்குச்சு. அவரு சல்லிட்டு மாட்டை அம்புட்டு லேசா யாராலயும் அணைஞ்சுர முடியாது. அவ்வளவு மொரட்டு மாடு.

அந்த மாட்டை, பெத்த புள்ளை மாரி ரொம்ப பொறுப்பா பாத்துக்கிட்டாரு சம்முக நாய்க்கரு. போன எடத்துல பூராம் அண்டா, குண்டா, தட்டு, தாம்பாளம், பதைக்கமுன்னு அள்ளிக்கிட்டு வந்துச்சு. யாத்தே, எம்புட்டுப் பேரு வாங்குச்சு அந்த வாயில்லாச் சீவென். மொதலாளி காலத்தோட அவக வீட்ல சல்லிட்டு மாடு வளக்குறது போச்சு. அந்தக் காலத்துல, சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு, தலமலயான் கோயில், கன்னிமாருசாமி கோயில் வழியா நடந்து போவாய்ங்க. அவய்ங்க அம்புட்டு பேத்துக்கும், மொதலாளியோட பேட்டை தோப்புல, அஞ்சாறு நாளைக்கு வயிறு முட்டக் கேப்பக் கூழும் ஈராங்காயமும் குடுப்பாக. தருமக் கஞ்சின்னு அதுக்குப் பேரு. அவக காட்ல பதிவுபடியா வேல பாக்குற ஏழை பாளைகளுக்கு, ரெம்ப வறச்சியான காலத்துல, தானியம் தவசமுன்னு புண்ணியவாளன் வாரி எறைப்பாரு. வேலை செஞ்சு கழிச்சுக்கங்கன்னு தாத்தாவும் அப்பத்தாவும் வாய் நெறையச் சொல்லுவாய்ங்க. தாத்தா, நத்தம்பட்டில போலீசு டேசன், தைலாபுரத்துல ஐஸ்கூல் பள்ளிக் கொடம், சுசைட்டி எல்லாம் கொண்ட்டு வந்தாரு. அம்புட்டுக்கும் அவரே ஓசியா எடமும் குடுத்தாரு. அதுனால சுசைட்டில அவரு படத்தை வச்சுருக்காய்ங்களாம். தாத்தாவுக்கு, வத்ராப்பு பஞ்சாயத்து ஊனியன் ஆபிசுல, பத்துப் பாஞ்சு வருசமா போட்டியில்லாம சேருமனாருந்த அவக அத்தை மகன் நடராசு, ரொம்ப ஒதவியா இருந்தாக. அங்குட்டு ஆப்புட்ட கிராமங்களுக்குப் பூராம், ரெண்டு பெருசுகளும் நெறைய ஒதவி ஒத்தாசை செஞ்சாய்ங்க. அதுனாலதேன் அவுக ரெண்டு பேரையும் சேத்து, ஒரு குடியிருப்புக்கு, "அழகு நடராசபொரம்"னு பேரே வச்சாய்ங்க.

காமராசரு மேல மொதலாளி அம்புட்டுப் பிரியமாக் கெடப்பாரு. கடைசி வரைக்கும் காமராசரு கட்சில தான் இருந்தாரு. தாத்தா எறந்தப்ப அவருமேல காங்கிரசு கொடியப் பொத்துனாய்ங்க. "அண்ணன், அண்ணன்"னு, சாத்தூரு எம். ஏல்ஏ., எஸ்.ஆர்., நாயுடு அய்யா மேல மொதலாளி அம்புட்டு உசுரா கெடப்பாரு. சும்மா சொல்லக்குடாது, அவரும், "தம்பி அழகுமலை, அழகுமலை"ன்னு, தாத்தாட்ட ரொம்ப பிரியமா இருப்பாரு. அவருல்லாம தாத்தா வீட்ல எந்த நல்லது கெட்டதும் நடந்ததே இல்ல. செவகாசி பக்கமா வடமலாபுரத்துல அவங்க நடத்துன, "வாத்யாரு ரெய்னிங் ஸ்கூல்"ல, தாத்தாவுக்கு ஒவ்வொரு வருசமும் ஒரு எடத்தை ஓசியாவே போட்டுக குடுத்துருவாய்ங்க. சாதி கீதியப் பாக்காம, யாராச்சும் ஏழை பாளைகளை தாத்தா சேத்து விட்ருவாரு. ரெய்னிங் முடிச்சவுடனே, சேர்மன் அய்யா பத்து பைசா வாங்காம, அவகள பஞ்சாயத்து பள்ளிக் கொடத்துல வாத்யாரா போட்டு விட்ருவாரு. தாத்தா சுசைட்டி பெரசரெண்டா இருந்தாரு. ராம்னாடு ஜில்லா போடு நெம்பராவும் இருந்தாரு. மகராசன் காமராசரு அய்யா ஒதவியினால, எழுமலயில இருந்த அவக அண்ணன் மகன் வாசிமல, டாக்டரு ஆயிட்டாரு. தாத்தாவோட மூத்த மகன் தங்கராசு, வெவசாய ஆபிசரு ஆனாரு. பத்து பைசா செலவழிக்கல. கட்சி விசுவாசத்துக்கு காமராசரு குடுத்த பரிசு. எந்த தேர்தலு வந்தாலும், காங்கிரசுல நிக்கிரவய்ங்க கொண்டயம்பட்டி வந்து, தாத்தாவையும், தைலா பொரத்துல சேர்மனையும் பாக்காம போக மாட்டாய்ங்க. சிவகாசி எம்.பி., தேர்தலுக்காக சிவகாசி அய்யநாடார், தாத்தாவைப் பாக்க கொண்டயம்பட்டிக்கே வந்தாரு. தாத்தாவும் சேர்மன் அய்யாவும் யாரைக் கையைக் காட்டுறாகளோ, அவுகளுக்கு அம்புட்டு சனமும் ஓட்டுப் போட்டுக் குமுச்சுருவாய்ங்க. ரெண்டு பேருமே காசு பணத்துக்கு ஆசைப்படாதவுக. தாத்தாவோட மூத்த மருமகன், பெரியகுளத்துல சர்க்காரு வேல பாத்தாரு. ஒரு நா வேலைக்குப் போனவரு, என்னாச்சுன்னு தெரியல, திடுதிப்புனு நின்னநிக்க அப்புராணி மாரடப்புல, பொண்டாட்டி புள்ளைகள விட்டுப்போட்டு, கொஞ்ச வயசுல பரிதபாமா செத்துப் போய்ட்டாரு. பொணத்தை ஊருக்குக் கொண்டாந்து, சுடுகாட்ல வச்சுருந்தாய்ங்க. வாய்க்கரிசி போட்டுட்டு, "அய்யா வேல்ச்சாமி, வேல்ச்சாமி"ன்னு வாய்ல துண்டைப் பொத்திட்டு அழுதாரு தாத்தா. கம்பீரமான கொண்டயம்பட்டி மொதலாளி, கண்ணீர் விட்டு கதறி அழுததைப் பாத்து, ஊரு சனமே அழுதுச்சு. அம்புட்டுத்தேன். அதுக்குப் பெறகு,

அப்புராணி ஆளே அரை உசுரா ஆயிப் போனாரு.

ஆரம்பத்துல தாத்தா கட்டுக் கட்டா சொக்கலால் பீடி குடிச்சாராம். வெத்தலை போடுவாராம்.

மூணாவது மகன் தருமரு கல்யாணத்தப்பத்தேன் நெஞ்சுவலி வந்து, தாத்தாவ பாடாப் படுத்திருச்சு. அன்னைக்கோட பீடி, வெத்தலை, எல்லாத்தையும் வள்ளுசா விட்டாரு.

கடைசியில நெஞ்சு வலி வந்து, ராசபாளையத்துல ஆசுபத்ரில இருந்தாரு. அவரு மகபுள்ள பேரன்தேன் அவரு கூடவே இருந்தான்.

அவருக்கு நம்ம சாகப் போறோம்னு நல்லா தெரிஞ்சுக்கிருச்சு. புதுசா வாங்குன பிளாஸ்க்கை கையில வச்சுக்குட்டு, "தாத்தா ஆசுபத்ரில இருக்கப்ப வாங்குனதுன்னு நெனைச்சுக்க"ன்னு சிரிச்சுக்கிட்டே சொல்றாரு. அவனுக்கு அழுகை அழுகையா வந்துச்சு.

மொதலாளி தாத்தா எறந்து போய்ட்டாங்க. அவரு போட்டாவைப் பாக்றப்போ அவனுக்கு அம்புட்டு அழுகை வருது. அவரு ஞாபகமா அவங்க வீட்ல எல்லாரு பேருக்கும் முன்னாடியும், "அழகு"ன்னு போட்டுக்கிறாய்ங்க.

ஆச்சு. அந்தா இந்தான்னு பத்து பாஞ்சு வருசம் ஓடியே போயிருச்சு.

"தாத்தா, ஒங்க மடியில நான் பெறந்து வளந்தேன். என் ஒடம்புல ஓடுற ரத்தமெல்லாம் நம்ம அப்பத்தா ஊத்துன கூழும் கஞ்சியுந்தேன். எத்தனை வருசம் ஆனாலும், ஒங்களையும் அப்பத்தாவயும் நான் மறக்கவே மாட்டேன். என் சம்சாரம் வயுத்துல, நீங்க ரெண்டு பேரும் எங்க புள்ளைகளா வந்து பெறக்கணும் தாத்தா!"

மூத்த பேரன், மனசுக்குள்ளயே கும்புட்டு கத்திக் கதறி அழுதுக்கிட்ருக்கான்.

வருவீகளா தாத்தா?

**விஜய் ஆண்டனி நடிப்பில், அருண் பிரபு இயக்கத்தில், ஷெல்லி காலிஸ்ட் ஒளிப்பதிவில், பாத்திமா விஜய் ஆண்டனி கம்பெனி, விஜய் ஆண்டனி பிலிம் கார்பரேஷன் நிறுவனம் சார்பாக மீரா விஜய் ஆண்டனி வழங்கும் படம் "சக்தித் திருமகன்". இப்படத்தின் இரண்டு பாடல்கள் மற்றும் டீசர் விஜய் ஆண்டனியின் பிறந்த நாளான இன்று 24.07.2025 பத்திரிகையாளர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.**

நிகழ்ச்சியில் விஜய் ஆண்டனி பேசுகையில், "நான் எப்போதுமே வேலை வேலை என்று வேலையில் கவனம் செலுத்துவதனால் எனக்கு பத்திரிகை நண்பர்களை சந்திப்பது மகிழ்ச்சியாக உள்ளது. அதனால் தான் நான் சமீபத்தில் கொடுக்கும் அனைத்து நேர்காணல்களிலும் மிகவும் காமெடியாகவும், ஜாலியாகவும் பதிலளித்துக் கொண்டிருக்கிறேன். தமிழ் சினிமாவில் நான் டாப் 5 படங்களில் அருவி ஒரு படம். அதே போல் இந்திய அளவில் டாப் 3 இயக்குனர்களில் அருண் பிரபு ஒருவர். சர்வதேச அளவில் படம் எடுக்கக் கூடிய வல்லமை அவருக்கு இருக்கிறது. எப்போது அருண் வந்தாலும் விஜய் ஆண்டனி பிலிம் கார்ப்பரே'ன் அவருக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும். அவருக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்றாலும் அதற்கு தயாராக இருக்கிறேன்.


'ெல்லியின் சப்போர்ட் இல்லாமல் அருண் பிரபு அவர்களால் அருவியை செய்திருக்க முடியாது. சில்லி அருணுக்கு மனைவி போன்றவர். இவர்கள் இருவரும் இணைந்து பெரிய அளவில் படங்களை உருவாக்க வேண்டும் என்று வேண்டு கிறேன். அருண் பிரபு அடுத்து இயக்கும் படம் பெரிய படமாக தான் இருக்க வேண்டும். கார்த்திக் நேத்தா அவர்களுடன் இணைந்து பணியாற்றியது எப்போதுமே மகிழ்ச்சியான தருணமாக தான் இருந்திருக்கிறது. நான் சில காலமாக இசையமைப்பதில் கவனம் செலுத்தவில்லை. சக்தித் திருமகன் படத்தின் வெளியீட்டிற்கு பின்பு நான் மீண்டும் இசையில் கவனம் செலுத்தவுள்ளேன் அப்போது மீண்டும் கார்த்திக் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவேன்.

அருண் பிரபு எப்போதுமே கதாநாயகியை தேர்வு செய்வதில் தனித்தன்மையாக இருப்பார். அவர் படங்களில் இருக்கும் நாயகிகள் பக்கத்து வீட்டு பெண்கள் போல தான் இருப்பார்கள். அதுபோலத்தான் இந்த படத்திற்கும் யாரை தேர்வு செய்வார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந் தேன். அப்போது ஒரு நாள் திருப்தியை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவரும் மிகவும் நன்றாக இப்படத்தில் பணியாற்றி இருக்கிறார். அவர் மென்மேலும் வளர வாழ்த்துகள். இப்படத்தில் பணியாற்றிய அனைத்து தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர் நடிகைகள் அனைவருக்கும் வாழ்த்துகள்." என்றார்.



**தொடர்ச்சி 23 ஆம் பக்கம்**

## திரை விமர்சனம்




ஏ.எம். ரத்னம் மற்றும் தயாகர் ராவ் தயாரிப்பில் பவன் கல்யாண், நிதி அகர்வால், பாபி தியோல், சத்யராஜ், சுனில், அனுசுயா மற்றும் பலர் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் ஹரிஹர வீரமல்லு. இசை கீரவாணி

1600களில் இந்த படத்தின் கதை நடக்கிறது. ராபின்ஹுட் போல நவாப் ஆட்களிடம் இருந்து திருடும் பொருட்களை ஏழை மக்களுக்கு கொடுத்து மக்கள் தலைவனாக வாழ்ந்து வருகிறார் வீர மல்லு (பவன் கல்யாண்). நவாபுக்கு செல்ல வேண்டிய வைரங்களையும் அவர் கொள்ளையடித்து வருகிறார். பஞ்சமியை (நிதி அகர்வால்) பார்த்ததும் அவள் மீது காதலில் விழுகிறார். அதுவே அவருக்கு ஆபத்தாகவும் முடிகிறது. வைரங்களை திருடும் போது, வஞ்சகத்தால் நவாப்பிடம் மாட்டிக் கொள்கிறார். ஆனால், இவரது திருடும் திறமையை கண்டு பூரித்துப்போன நவாப், இவனை வைத்து இங்கே இருந்து டெல்லிக்கு திருடப்பட்ட நம்முடைய கோஹினூர் வைரத்தை எப்படியாவது மீட்க வேண்டும் என அவுரங்கசிப்பிடம் (பாபி தியோல்) இருந்து கோஹீனூர் வைரத்தை திருட அனுப்பி வைக்கப் படுகிறார். அவுரங்கசிப்பிடம் இருந்து கோஹீனூர் வைரத்தை மீட்டுக் கொண்டு வந்தாரா? அவுரங்கசிப்புக்கும் ஹரி ஹர வீர மல்லுவுக்கும் உள்ள முன் பகை என்ன? அவருடைய தனி மிஷன் என்ன? என்பது தான் இந்த படத்தின் கதை.

கதாநாயகனாக பவண் கல்யாண் நடிப்பிலும் நடனத்திலும் சண்டைக்காட்சிகளிலும் சிறப்பாக நடித்துள்ளார்.கதாநாயகியாக நிதி அகர்வால் கொடுத்த கதாபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார். சத்யராஜ், சுனில், அனுசுயா என இதில் நடித்திருக்கும் அனைவரும் அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். கீரவாணி இசையில் பாடல்கள□ம் பிண்ணனி இசையும் படத்திற்கு பெரிய பலம்.

முதல் பாதி படம் விறுவிறுப்பாக சென்ற நிலையில், 2ம் பாதியையும் இன்னும் விறுவிறுப்பாக சொல்லியிருக்கலாம் இயக்குநர். பாராட்டுக்கள்.

சுதீஷ் சங்கர் இயக்கத்தில் வடிவேலு, பகத் பாசில், கோவை சரளா, விவேக் பிரசன்னா, சித்தாரா பி.எல்.தேனப்பன் லிவிங்ஸ்டன், ரேணுகா, சரவண சுப்பையா, கிரு'ணா, ஹரிதா மற்றும் பலர் நடித்து வேளியாகியிருக்கும் படம் மாரீசன்




கதை

சிறு சிறு திருட்டு வேலைகளை செய்து வாழ்ந்து வரும் பகத் பாசில் பாளையங்கோட்டை சிறையில் இருந்து வெளியே வருகிறார். மீண்டும் திருட்டு வேலையில் ஈடுபடுகிறார். ஒரு வீட்டில் கொள்ளை யடிக்க அந்த வீட்டினுள் நுழைகிறார். அப்போது அந்த வீட்டில் வடிவேலு இருக்கிறார். தன்னை எப்படியாவது இந்த வீட்டிலிருந்து காப்பாற்றி கூட்டிச் செல்லும்படி வடிவேலு கேட்கிறார். வடிவேல் பணமும் தருவதாக சொல்ல பகத் பாசில் வடிவேலுவை அங்கிருந்து கூட்டி செல்கிறார். வடிவேலுவின் பேங்க் அக்கவுண்டில் 25 லட்சம் இருப்பதை தெரிந்து கொண்ட பகத் பாசில் அந்த பணத்தை எப்படியாவது கொள்ளை யடிக்க வேண்டும் என்று திட்டமிடுகிறார். மறுபுறம் மறதி வியாதி இருக்கும் வடிவேலு ஏடிஎம் பின் நம்பரை கூட அவரால் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. இந்த சூழ்நிலையில் பகத் பாசில் வடிவேலுவிட மிருந்து அந்த 25 லட்சத்தை கொள்ளையடித்தாரா? இல்லையா? என்பதே மாரீசன் படத்தின் கதை.

வடிவேலு மாமன்னன் படத்திற்கு பிறகு இந்த படத்திலும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். வேலாயுதம் பிள்ளை என்ற கதாபாத்திரத்தில் ஒரு மறதி நோயாளியாக அந்த கதாபாத்திரமாகவே வாழ்ந்துள்ளார் பகத் பாசில் தயாளன் என்ற கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்துள்ளார். கோவை சரளா, விவேக் பிரசன்னா, சித்தாரா பி.எல்.தேனப்பன் லிவிங்ஸ்டன், ரேணுகா, சரவண சுப்பையா, கிருஷ்'ணா, ஹரிதா என இதில் நடித்திருக்கும் அனைவரும்

அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் மற்றும் பின்னணி இசை படத்திற்கு பலம் சேர்த்துள்ளது கலைச்செல்வன் சிவாஜியின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம்.கதை திரைக்கதை படைப்பு இயக்கம் கிருஷ்'ண மூர்த்தி

முதல் பாதி சுவாராஸ்யமே இல்லாமல் செல்கிறது. இரண்டாம் பாதியாவது சுவாராஸ்யமாக இருக்கும் என்று பார்த்தால் அதுவும் சுமாரகவே இருக்கிறது. மொத்தத்தில் சுமாரான படம்.




சத்யஜோதி பிலிம்ஸ் தியாகராஜன் தயாரிப்பில் பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி, நித்யாமேனன், சரவணன், தீபாசங்கர், காளி வெங்கட், மைனா மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் தலைவன் தலைவி. கதை

ஆகாச வீரனுக்கு (விஜய் சேதுபதி) தெறிவிக்காமல் அவர் மகளுக்கு மொட்டையடிக்க கோயிலுக்கு வருகின்றனர் பேரரசியின் (நித்யா மேனன்) குடும்பம். இந்த விஷயம் தெறிந்து ஆகாச வீரன் குடும்பம் அங்கு வர அவர்களுக்குள் சண்டை ஏற்படுகிறது.அவர்கள் ஏன் பிரிந்தார்கள், என்ன சண்டை, என்று பிளாஷ்'பேக் ஆரம்பிக்கிறது.

குடும்பத்துடன் சேர்ந்து ஹோட்டல் நடத்தி வரும் விஜய் சேதுபதிக்கும் (ஆகாச வீரன்), நித்யா மேனனுக்கும் (பேரரசி) திருமணம் நிச்சயம் செய்யப் படுகிறது. இதன்பின் இருவரும் பழகி புரிந்து கொண்டு காதலித்துக்கொண்டிருக்கும்போது, விஜய் சேதுபதி, அவருடைய தம்பி, அவருடைய தந்தை அனைவரும் ரவுடிகள் என தெரியவர, நித்யா மேனன் வீட்டில் இந்த திருமணத்தை நிறுத்த முடிவு செய்கின்றனர். ஆனால், தனது வீட்டை எதிர்த்து விஜய் சேதுபதியை திருமணம் செய்துகொள்கிறார் நித்யா மேனன். திருமணத்திற்கு பின் வாழ்க்கை நன்றாக போய்க்கொண்டு இருக்க, விஜய் சேதுபதியின் தந்தை சரவணன், தனது மருமகள் நித்யா மேனனை ஹோட்டல் கல்லா பெட்டியில் அமர்ந்து கணக்கை பார்த்து கொள்ள சொல்கிறார். இதுநாள் வரை அதனை பார்த்துக்கொண்டிருந்த விஜய் சேதுபதி அம்மா தீபாவுக்கு புதிதாக வந்த மருமகள் தனது இடத்தை பிடித்து விட்டாள் என்கிற ஈகோ ஏற்படுகிறது. அதே போல் இதுநாள் வரை தனது பெயர் ஹோட்டலில் இருந்தது, ஆனால், தற்போது விஜய் சேதுபதி மனைவி பெயரில் ஹோட்டலை மாற்றியதால், விஜய் சேதுபதியின் தங்கைக்கும் கோபம் வருகிறது. இதனால் அம்மாவும் மகளும் சேர்ந்து நித்யா மேனனை ஹோட்டலில் வேலை பார்க்கும் ஆள் போல் நடத்த, இதை நித்யா மேனன் அம்மா பார்த்து இப்படியெல்லாம் இருக்கக் கூடாது என அவ்வப்போது தூபம் போட விஜய் சேதுபதிக்கும் - நித்யா மேனனுக்கும் இடையே சண்டை வெடிக்கிறது. ஒரு நாள் சண்டை என்றால் மறுநாள் இணைந்து விடுகிறார்கள். இதற்கிடையில் இருவருக்கும் அழகிய பெண் குழந்தை பிறக்கிறது. குழந்தை பிறந்த பிறகும் சண்டை ஏற்படுவதும் அதனால் பிரிவதும் சேர்வதும் ஏன்று போய் கோண்டிருக்க இந்த நேரத்தில், விஜய் சேதுபதிக்கு வேறொரு திருமணம் என்ற செய்தியறிந்து நித்யா மேனன் விஜய் சேதுபதியிடம் சண்டை போட அது பெரிய சண்டையாக வெடித்து, இருவரும் பிரிந்து விடுகிறார்கள். சில மாதங்கள் கழித்து மொட்டை போட கோயிலுக்கு வந்துள்ளார்கள் அதனால்தான் சண்டை ஏன்று பிளாஷ்'பேக் முடிய அதன் பிறகு என்ன நடந்தது? இருவரும் சேர்ந்து வாழ்ந்தார்களா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

கதாநாயகன் விஜய் சேதுபதி கதாநாயகி நித்யா மேனன் இருவருமே நிஜ கணவன் மனைவி போல் நடிப்பில் மிரட்டியிருக்கிறார்கள். உண்மையா-கவே ஒரு கணவன் மனைவிக்கு இடையே எப்படி சண்டை வந்தால் நடந்து கொள்வார்களா அதே போல் வெளிப்படுத்தியுள்ளனர். படம் ஆரம்பம் முதல் இறுதிவரை இருவரும் ரொமான்ஸ், சண்டை, டான்ஸ், நகைச்சுவை என அனைத்திலும் கலக்கியுள்ளனர். மற்றும் இதில் நடித்திருக்கும் தீபா, செம்பன் வினோத், ரோ'ஷனி ஹரிப்ரியன், சரவணன், மைனா நந்தினி, காளி வெங்கட், ஆர்.கே. சுரேஷ்', வினோத் சாகர், அருள்-தாஸ், ஜானகி சுரேஷ்', சென்றாயன் என அனைவரும் தங்களது கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்து கை-தட்டல் பெறுகின்றனர். விஜய் சேதுபதிக்கு அம்மாவாக நடித்திருக்கும் தீபா, வில்லத்தனமான கதாபாத்திரத்-தில் நன்றாக நடித்து மக்களிடம் திட்டு வாங்குகின்றார். தனது நகைச்சுவையின் மூலம் யோகி-பாபு, எல்லோரையும் சிரிக்கவைக்கிறார். சந்தோஷ்' நாராயணனின் பாடல்களும் பின்னணி இசையும் ரசிக்கவைக்கிறது. எம். சுகுமாரின் ஒளிப்பதிவு படத்திற்கு அருமை.

இயக்குநர் பாண்டிராஜ் கல்யாணத்துக்கு முன் உள்ள காதல் அதன்பிறகு கணவன் மனைவி இடையே நடக்கும் ஊடல், கூடல் மற்றும் உறவுகளுக்கு இடையே நடக்கும் ஈகோ இவைகளை கதை களமாக எடுத்துக்கொண்டு அதை சுவாராஸ்யமாக கொடுத்துள்ளார். பாராட்டுக்கள்.

# ஏற்றமிகு 79வது சுதந்திர தினம்!

- பாப்பனப்பட்டு வ.முருகன்




இந்திய சுதந்திர தினம், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 அன்று கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு, 79வது ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது.

1947 ஆம் ஆண்டு, இதே நாளில், இந்தியா பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று, சுதந்திர நாடாக உருவெடுத்தது.

இந்த நாள், இந்திய மக்களின் ஒற்றுமை, தியாகம் மற்றும் போராட்டத்தின் அடையாளமாக விளங்குகிறது.

இந்திய சுதந்திர தினத்தைப் பற்றிய சுவாரஸ்யமான தகவல்களைப் பார்ப்போம்.

இந்தியாவின் சுதந்திரம், அதிகாரப் பூர்வமாக, 1947, ஆகஸ்ட் 15 அன்று, நள்ளிரவு 12 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த வரலாற்று தருணத்தில், இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, டெல்லியில் உள்ள செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி, “விதியுடன் ஒரு சந்திப்பு“ (Tryst with Destiny) என்ற புகழ்பெற்ற உரையை நிகழ்த்தினார்.

இந்த உரை, இந்திய மக்களின் உறுதியையும், நம்பிக்கையையும் பிரதிபலித்தது.

இந்திய சுதந்திரப் போராட்டம், பல தலைவர்களின் தியாகத்தால் வெற்றி பெற்றது. மகாத்மா காந்தியின் அகிம்சை வழியும், சுபாஷ் சந்திர போஸின் ஆயுதப் போராட்டமும், இந்தியாவின் விடுதலைக்கு முக்கிய பங்காற்றின.

காந்தியின் உப்பு சத்தியாகிரகம் (1930) மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) போன்றவை, பிரிட்டிஷாருக்கு எதிரான மக்கள் எழுச்சியைத் தூண்டின.

இந்தியாவின் தேசியக் கொடி, “மூவண்ணக் கொடி“, பிங்கலி வெங்கய்யாவால் வடிவமைக்கப்பட்டது.


இதிலுள்ள காவி நிறம் தைரியத்தையும், வெள்ளை அமைதியையும், பச்சை வளர்ச்சியையும், நடுவில் உள்ள அசோக சக்கரம் நீதியையும் குறிக்கிறது.

1947, ஆகஸ்ட் 15 அன்று, இந்தக் கொடி, முதன் முதலாக செங்கோட்டையில் பறக்கவிடப்பட்டது.

இந்திய சுதந்திர தினம், இந்தியா முழுவதும் பெரும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

செங்கோட்டையில் பிரதமர் கொடியேற்றி உரையாற்றுவது, முக்கிய நிகழ்வாகும்.

பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் கலாசார நிகழ்ச்சிகள், மரியாதை அணி வகுப்புகள் மற்றும் தேசபக்தி பாடல்கள் இடம்பெறுகின்றன.




மாநில தலைநகரங்களிலும், இதே போன்ற கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் சுதந்திரம், ஒரு சாதாரண நிகழ்வல்ல இது நூற்றாண்டு கால காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் வெற்றியாகும்.

இந்தியாவின் மொழி, மதம், கலாசாரம் உள்ளிட்ட பன்முகத்தன்மை, இந்தப் போராட்டத்தில் ஒரு பலமாக விளங்கியது.

சுதந்திர தினம், இந்த ஒற்றுமையை நினைவுகூரும் நாளாகவும் உள்ளது.

சுதந்திர தினத்தன்று விருதுகள் வழங்கப்படுவது, மற்றொரு முக்கிய அம்சம். கல்பனா சாவ்லா, சச்சின் டெண்டுல்கர் போன்றவர்களுக்கு பாரத ரத்னா, பத்ம விபூஷண் போன்ற உயரிய விருதுகள், இந்நாளில் அறிவிக்கப்படுவது வழக்கம்.

இந்திய சுதந்திர தினம், வெறும் விடுமுறை நாள் மட்டுமல்லளு இது நாட்டின் முன்னேற்றத்தையும், சவால்களையும் மதிப்பிடும் நாளாகும்.

இந்த நாள், இளைஞர்களுக்கு தேசபக்தியையும், பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கிறது. மேலும், நமது வரலாறு, தியாகம் மற்றும் ஒற்றுமையின் பெருமையை நினைவூட்டுகிறது.

# காசேதான் கடவுளடா (சிறுகதை)

கா.கலைச்செல்வி

அதிகாலை வேளை, பொழுது விடிந்ததும் என்ன நடக்கும் என்பதை நினைத்தாலே இதயம் வெடித்திடும் போல் இருக்கிறது, எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் ஆன்லைன் லோன் வாங்கி தங்கை மகளின் காது குத்து விழாவை சீரும் சிறப்பு-மாக செய்து விட்டு, இப்போது கடனை அடைக்க முடியாமல் மனம் நொந்து என்ன செய்வது என்றே தெரியவில்லை. காலை பத்து மணிக்குள் கட்ட வேண்டிய பணத்தை கட்டவில்லைன்னா தவறான வீடியோ வெளியீடு செய்துவிடுவோமுனு சொன்னதைக் கேட்டு கணவனும் மனைவியும் விடிய விடிய தூங்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் புலம்பினார்கள்.

நம்ம விரலுக்கேற்ற வீக்கம் தான் வேணும்னு தலையால அடிச்சிகிட்டேன். ஆன்லைன்ல கடன் வாங்க வேண்டாம்னு சொன்னா கேட்டிங்களா, இப்போ யார் நமக்கு உதவ இருக்காங்க என்றாள் கலா தன் கணவனிடம்.

என் தங்கையிடம் கேட்டுப் பார்க்கலாம் போனை கொடு என்றான் ஜீவா.

ஏங்க நீங்க கேட்டதும் அப்படியே உங்கள் தங்கச்சி கொடுத்திட்டு தான் வேற வேலை பார்ப்பாங்க என்றாள் கலா.

நானும் எனக்குத் தெரிஞ்சவங்க கிட்ட கேட்டுட்டேன் . இப்போ வேற வழி இல்லை. எனக் கூறிக்கொண்டு தன் தங்கையை அலைபேசியில் அழைத்தான்.

அண்ணா சொல்லுண்ணா, காலைலையே கூப்பிட்டு இருக்க என்ன ஏதாவது விசே‘மா என்றாள் தங்கை .

அதெல்லாம் ஒன்னும் இல்லம்மா, அவசரமா கொஞ்சம் பணம் வேணும் அதாம்மா என்றான் ஜீவா.

என்ன அண்ணே நீ எங்கிட்ட கேட்க்குற உனக்கு தெரியாதா என்கிட்ட பணம் இல்லையே எனக் கூற, தங்கையின் கணவன், கையில காசு வச்சிக்கிட்டு இருந்தா செலவாகிடும் நகை வாங்கி வச்சிடலாம்னு என்ன கிளம்ப சொல்லிட்டு நீ யார் கிட்ட வழவழன்னு பேசிட்டு இருக்கிற. நான் வண்டிய வெளியே எடுக்கிறேன், சீக்கிரம் வா என்று பேசுவது போனில் அவனுக்கு கேட்க, ஜீவா அப்படியே செய்வது அறியாமல் நின்றான்.

அண்ணே நீ வேற எங்காவது ஏற்பாடு பண்ணிக்க என்று பதிலுக்கு காத்திராமல் தொடர்பைத் துண்டித்தாள்.

கண்ணில் நீர் வழிய ஒரு கணம் ஆறு வருடங்கள் பின்னோக்கி சென்றான்.

தன் பெற்றோர் ஒரு விபத்தில் இறந்து விட்டார்கள். அப்போது ஜீவா கல்லூரி படிப்பை முடித்து இருந்தான். அவன் தங்கை பன்னிரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள்.



உறவினர் சேர்த்து மாமன் மகளான கலாவை திருமணம் செய்து வைத்தார்கள். கலா தன் கணவனின் தங்கையை தன் மகள் போலவே பார்த்துக் கொண்டாள். ஜீவா படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்காமல் வாடகை கார் ஓட்டி குடும்பத்தைப் பார்த்து கொண்டான். கலாவும் தையல் வேலைக்கு சென்று வந்தாள். ஜீவா தன் தங்கையை சிரமப்பட்டு கல்லூரியில் சேர்ந்து படிக்க வைத்தான். படிப்பு முடிந்ததும் நல்ல வசதியான சம்மந்தம் வரவும் தகுதிக்கு மீறிய இடமென ஜீவா யோசித்தான்.

அவன் தங்கைக்கு மாப்பிள்ளையை மிகவும் பிடித்து விட்டது. அண்ணி எனக்கு இவரை மிகவும் பிடித்து இருக்கிறது. தயவுசெய்து அண்ணாவிடம் சொல்லுங்கள் என்று கூறினாள்.

கலா தன் நகைகளைக் கொடுத்து இந்த திருமணத்தை நடத்தி வைத்தாள். ஜீவா தங்கைக்கே அனைத்தும் செய்தான்.

இன்று இவனுக்கு ஒரு பிரச்சினை என்றதும் தங்கை கைவிரித்து விட்டாள்.

ஜீவாவின் கண்ணீரைக் கண்டதும் கலா துடி துடித்து போனாள். ஏங்க இப்படி கலங்குறிங்க எப்படியும் கட்டிடலாம் நான் இருக்கிறேன் உங்களுக்காக என்றாள்.

ஜீவா கலாவின் மடியில் தலை வைத்து என்னை மன்னித்து விடு உனக்காக நான் இதுவரை எதுவும் செய்யவில்லை இனி உனக்கு நான் எனக்கு நீ போதும். காசுக்கு தான் மதிப்பு மனசுக்கு இல்லாமல் போய்விட்டது என்று புலம்ப, சரி விடுங்க இப்பவாவது புரிஞ்சுக்கிட்டிங்களே, எங்க

தொடர்ச்சி 32 ஆம் பக்கம்


# 2025 ஆகஸ்ட் மாத ராசி பலன்கள்

## மேஷம்



அலுவலகத்தில் முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தென்படும். புதிய வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. வேலையில் மாற்றத்தை விரும்புபவர்கள் நல்ல பலன்களைப் பெறலாம். வணிக ரீதியாகப் பயணம் செய்ய விரும்புபவர்களுக்கும் சில நல்ல பலன்கள் கிடைக்கும்.நிதி விஷயங்களில் நீங்கள் அதிக அளவில் சாதகமான முடிவுகளைப் பெறலாம். பொருளாதாரத்தில் முன்னேற்றம் இருக்கும். புதிய வருமான ஆதாரங்கள் உருவாகும். காதல் வாழ்க்கை நன்றாக இருக்கும். கணவன்-மனைவிக்கிடையில் ஒற்றுமை மேலோங்கும், மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். ஒருவருக்கொருவர் முழு நேரத்தையும் கொடுப்பீர்கள். வீடு மற்றும் குடும்பம் தொடர்பான விஷயங்களில் சராசரி நிலை முடிவுகளை எதிர்பார்க்கலாம்.

## ரிஷபம்



இது யோகமான மாதம். எடுக்கக் கூடிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நீங்கள் எந்தவொரு விஷயத்திலும் தைரியமாகப் பேசுவீர்கள். புது விஷயங்களை இந்த மாதம் தொடங்கலாம். தொட்ட காரியம் வெற்றி ஏற்படுத்தி தரும். ஆவணங்கள் சார்ந்த விஷயங்களில் கவனம் தேவை. நுவே காது, மூக்கு, தொண்டை சார்ந்த பிரச்சினை வரலாம். தாயுடன் பிரச்சினை ஏற்படலாம். தாய் வழி உறவில் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். தாய் வழி சொந்தம் மூலம் பிரச்சினைகள் வரலாம். சூடு சார்ந்த ஆரோக்கிய பிரச்சினைகள் வரலாம் உத்தியோக த்தில் மிகச் சிறப்பான வரவேற்பு இருக்கும். வரன்களை சரிபார்த்து திருமனம் முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. நிதானித்து வரன் பார்ப்பது நல்லது தந்தை மூலம் ஆதாயம் கிட்டும். தந்தை தொழில் செய்பவர்-கள் அதன் மூலம் லாபம் காணலாம். தொழிலில் யோகம் உண்டு. லாபம் உண்டு. ஆனால் லாபம் நிலையானதா என்று பார்த்து முடிவெடுக்க வேண்டும். தொழில் முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

## மிதுனம்



சிறப்பான மாதமாக இந்த மாதம் இருக்கும். முடிக்க முடியாத காரியங்களை முடித்து அளிப்பீர்கள். பேச்சு குறைபாடுகள் நீங்கும். மறைமுக தடைகள் அதிகமாக இருக்கும். சொந்த தொழிலில் அனுகூலமான வெற்றி கிட்டும். உத்-தியோகத்தில் திறமைக்கேற்ற பாராட்டு கிட்டும். திருமணம் மற்றும் இல்லறம் சார்ந்த விஷயங்க-ளில் கவனம் தேவை. மாத தொடக்கம் மகிழ்ச்சி அளிக்கும். புதிய வாய்ப்புகள் மற்றும் வெற்றி இருக்கும். உதவிக்கு பணம் கொடுத்தால் திரும்ப எதிர்பார்க்காதீர்கள். கொடுத்த கடன் திரும்ப வரும் வாய்ப்பு குறைவு. மறைமுக தனம் உண்டு என்றாலும் பணம் சார்ந்த வி'யங்களில் கவனம் தேவை. பயணத்தில் அதிக கவனம் தேவை. எடுக்கும் முயற்சிகளில் தடை ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி கிட்டும். உத்தியோகம் சிறப்பாக இருக்கும். மறைமுக எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். அன்னதானம், அல்லது உதவி செய்வது நன்மை ஏற்படுத்தி தரும். மதிப்பு மரியாதை உயரும்.

## கடகம்



யோகமான வாய்ப்புகள் உண்டு. சில இடங்களில் மௌனம் காப்பது நல்லது. இந்த மாதம் மிகப் பெரிய வெற்றி காண்பீர்கள். பிறரை சார்ந்து இருப்பதன் மூலம் பிரச்சினைகள் வரலாம். பணத்தை கையில் வைத்துக் கொள்ளாதீர்கள். செலவுகளில் நிதானம் தேவை. அவச-ியம் என்றால் மட்டும் கடன் வாங்கவும். முயற்சிகளில் வெற்றி உண்டு. மேலதிகாரிகளுடன் மனஸ்தாபம் இருக்கலாம். நிதானமாக செயல்படவும். தாயாரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயாருக்கு மூட்டு வலி இடுப்பு வலி இருக்கலாம். கடக ராசி குழந்தைகளிடம் பிடிவாதம் இருக்கலாம். அவர்களை நட்புடன் நடத்துங்கள். திருமண வஷெஷயத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் அமைதி காப்பது நல்லது. மூதாதையர் கர்மாக்களை முறையாக செய்வது நல்லது சொந்த தொழிலில் முயற்சி மூலம் வெற்றி கிட்டும்.

## சிம்மம்



சிறப்புகள் நிறைந்த மாதமாக இருக்கும். மன ரீதியாக அழுத்தம் இருந்தாலும் வருமானம் காணப்படும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினை-கள் ஏற்பட்டு பிறகு ஒற்றுமை உண்டாகும். முக்கியமான ஆவணங்களில் கவனம் தேவை. கர்-ப்பிணிகள் கவனமாக இருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி இருக்கும். திருமண பேச்சு வார்த்தைகளில் கவனம் தேவை. வெளியூர், வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. வீண் அலைச்சல்கள் இருந்தாலும் பயணம் சார்ந்த விஷயங்களில் கவனம் தேவை. உழைப்புக்கேற்ற ஊதியம் கிட்டும். பெண்கள் சார்ந்த உத்தியோகத்தில் சிறப்பான வருமானம் வரும். புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. பிள்ளை-கள் வழியில் கவனம் தேவை. உத்தியோத்தில் சில இடைஞ்சல்கள் வரலாம். நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்று இருப்பது நல்லது.

## கன்னி




இந்த மாதம் வெற்றிகரமாக இருக்கும். வருமானம் பெருகும். சிறு தூர பயணங்கள் மூலம் மகிழ்ச்சி இருக்கும். இல்லறம் சார்ந்த பேச்சு வார்த்தைகளில் கவனம் தேவை. தொட்ட காரியங்களில் வெற்றி இருக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகள் வளர்ப்பில் கண்டிப்பு அவசியம். அதன் மூலம் சில மாற்றங்களை ஏற்படுத்தித் தரும். சொத்து சேர்க்கை இருக்கும். ஒரு சிலருக்கு விபத்து சார்ந்த அல்லது செய்வினை சார்ந்த பிரச்சினைகளை சந்திக்க நேரும். அதற்கு பரிகாரமாக மாதாமாதம் வரும் அமாவாசை அன்று வெள்ளை பூசணி ஜூஸ் 50 மில்லி குடிப்பது அதன் வீரியத்தைக் குறைக்கும். பயணத்தில் கவனம் தேவை. இல்லறத்தில் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. குடும்பத்தோடு திருநள்ளாறு செல்வது நன்மை அளிக்கும். தந்தை வழியில் அனுகூலம் கிட்டும் . ஆன்மீக யாத்திரை நன்மை அளிக்கும். சொந்த தொழிலில் சிறப்பான நிலை உண்டு. வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் லாபம் காணலாம். மூத்த உடன் பிறப்பால் ஆதாயம் உண்டு.

## துலாம்



இந்த மாதம் உங்களுக்கு பொற்காலம் என்று கூறலாம். மகாலட்சுமி வழிபாடு வசதி வாய்ப்புகளை அளிக்கும். திருமண வாழ்க்கையில் கவனம் தேவை. கர்ப்பிணிகள் கவனமாக இருக்க வேண்டும்.ஒரு பெண்ணால் மிகப் பெரிய பிரச்சினைகளை சந்திக்க நேரும். மதிப்பு மரியாதை பொருளாதார வசதி கூடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். தனம் சார்ந்த வி'யங்கள் வெற்றி அளிக்கும். தாய் வழி உறவுகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். தாய் வழி சொத்துக்கள் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. நட்புடன் அவர்களைக் கையாள வேண்டும். நீங்கள் மந்தமாக உணரலாம். நோய் எதிர்ப்பு சக்திகளை அதிகரித்துக் கொள்ளுங்கள். உங்கள் பேச்சுகளை குறைந்துக் கொள்ளுங்கள். வாழ்க்கைத் துணை மூலம் ஆதாயம் கிட்டும். தந்தை வழியில் அனுகூலம் கிட்டும். தொழிலில் லாபம் கிட்டும். முதலீடுகளில் கவனம் தேவை. கூட்டுத் தொழிலில் எச்சரிக்கை தேவை. மூத்த உடன் பிறப்புடன் அமைதி காக்க வேண்டும். லக்'மி நரசிம்மரை வழிபட வேண்டும். உங்கள் கையால் மஞ்சள் பூசணியில் தீபம் போட கோடீஸ்வர யோகம் கிட்டும்.

## விருச்சிகம்



மறைமுக வருமானம் கிட்டும். செலவு-களும் அதிகரிக்கும். எனவே கவனம் தேவை. ஆரோக்கிய பிரச்சினை களில் இருந்து வெளி வருவீர்கள். தனித்து முடிவெடுப்பது நல்லது. புதிய நட்பு மகிழ்ச்சி அளிக்கும். திடீர் வருமானம் வரும். லாபங்கள் கிட்டும். அதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் வாக்கில் கவனம் தேவை. வருமானத்தை சேமிப்பது நல்லது. வாக்குவா-தங்களை தவிர்க்க வேண்டும். முயற்சிகளில் வெற்றி கிட்டும். வாய்வு,இதயம்,முதுகுத்தண்டு சார்ந்த வஷ'யங்களில் கவனம் தேவை.மருத்துவ செலவுகள் இருக்கலாம். பிள்ளைகள் நன்றாகப் படிப்பார்கள். திருமணம் சார்ந்த பேச்சு வார்த்தை களில் கவனம் தேவை. கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை இருக்கும். மனஸ்தாபங்கள் நீங்கும். தந்தை ஆரோக்கியத்தில் கவனம் தேவை சொந்த தொழிலில் விருத்தி காண விநாயகரை வணங்குவது நல்லது.

## தனுசு

பிரச்சினைகள் இருந்தாலும் அதனை சமாளிப்பீர்கள். புதிய வாய்ப்புகள் கிட்டும் வாழ்க்கைத் துணை மூலம் திருப்பு முனை காண்பீர்கள். தேவையல்லாத பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். வெளியூர், வெளி மாநிலம் செல்வதை தவிர்க்க வேண்டும். முயற்சிகளில் தடைகள் நீங்கும். பொருளாதார ரீதியாக



நிம்மதி இருக்கும். வேலைப் பளு அதிகரிக்கும். இந்த மாதம் கிட்டும் வாய்ப்புகளை சரியாகப் பயன் படுத்திக் கொள்ளுங்கள். பண வரவு சிறப்பாக இருக்கும். உங்களால் பணத்தை சேமிக்கவும் முடியும். முயற்சிகளில் வெற்றி கிட்டும். பூர்வீக சொத்துகளில் ஆதாம் உண்டு. நிலம் மூலம் வருமானம் உயரும். உத்தியோகத்தில் சிறு சிறு பிரச்சினைகளை பெண்கள் மூலமாக வரும். காஞ்சி காமாட்சியை வணங்குங்கள். புதிய ஒப்பந்தங்களை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் வழியில் அனுகூலம் உண்டு.. வெளிநாடு யோகத்தை ஏற்படுத்தித் தரும். தந்தை மூலம் அனுகூலம் கிட்டும். சொந்த தொழிலில் அதிக லாபம் கிட்டும்.

## மகரம்

திடீர் பயணங்களைத் தவிர்க்க வேண்டும். தாய் தந்தை வி'யங்களில் உடனடியாக முடிவு எடுக்க வேண்டும். பிறருக்கு உதவி செய்யும் போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். முயற்சியில் வெற்றி ஏற்படும். மிகைப்படுத்தி பேசுவதை குறைக்க வேண்டும். நம்பிக்கையை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். பொருளாதாரக் கடமைகளை சரியாக செய்ய வேண்டும். ஜாமீன் கையெழுத்து



போடுதல் கூடாது. புதிய கடனை யோசித்து மேற்கொள்ள வேண்டும். பிள்ளைகள் வழியில் அனுகூலம் உண்டு. அவர்களுக்கான மருத்துவ செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் வரலாம். எனவே அவர்களை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். திருமணம் சார்ந்த பேச்சு வார்த்தைகளை தள்ளிப் போடுவது நல்லது. அவசியம் எனில் குல தெய்வ பூஜை முடித்து விட்டு தொடங்கவும். ஆசன வாய் நோய், இரத்தப் போக்கு இருக்கலாம். மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவால் நன்மை ஏற்படும்ஜ பிரிந்த குடும்பம் ஒன்று சேரலாம். தொழில் சிறப்பாக நடக்கும்

## கும்பம்

சிறப்பான வாய்ப்புகள் கிட்டும். பிரச்சினைக-ளின் வீரியம் குறையும். உங்களின் திறமை வெளிப்படும். வருமானம் மகிழ்ச்சி அளிக்கும். இல்லற வாழ்வில் கவனம் தேவை. வெளிநாடு, வெளியூர் யோகம் உண்டு. உங்கள் ஆவணங்களில் கவனம் தேவை. கடந்த மாத தோல்விகள் நீங்கி வெற்றி கிட்டும்.



உங்கள் முயற்சிக்கேற்ற வெற்றியை நீங்கள் காண்பீர்கள். மறைமுக அவமானங்கள் இருக்கலாம். தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். உங்கள் மதிப்பு மரியாதை உயரும். மாதா மாதம் நீங்கள் பிறந்த கிழமைகளில் நாக தேவதைக்கு அபிே கம் அர்ச்சனை செய்வது நல்லது. தனம் சார்ந்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பிரிந்த குடும்பம் ஒன்று கூடும். அருகில் இருக்கும் காவல் தெய்வம் கோவில் சென்று வழிபடுவது நன்று. வாக்கினால் பிரச்சினை ஏற்படலாம். ஆஞ்சநேயருக்கு தீபம் ஏற்றி வழிபடுவதன் மூலம் இன்னல்கள் நீங்கும். தாய் வழி உறவால் வெற்றி கிட்டும். திருமணப் பேச்சு வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். சொந்த தொழிலில் அதிக லாபம் கிட்டும். திடீர் வருமானம் கிட்டும். அவசர முடிவுகளை எடுக்காதீர்கள்.

## மீனம்

வெளிநாடு வெளியூர் யோகம் உண்டு. வருமானம் மகிழ்ச்சி அளிக்கும். ஒரு சிலருக்கு திடீர் பிரச்சினை வரலாம். நிம்மதி இல்லாத சூழலை ஏற்படுத்தலாம். இல்லறத்-தில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். திடீர் லாபங்கள்,



மகிழ்ச்சி கிட்டும். ஊனமுற்றவர்களு- க் கு உதவி செய்வதன் மூலம் சனியால் யோகம் பெறலாம். வாழ்க்கைத் துணையுடன் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். வருமானம் குறைந்தாலும் மாத இறுதியில் சீர்படும். உங்கள் பேச்சை மூச்சுக் காற்று போல பயன்படுத்த வேண்டும். முயற்சிகளில் வெற்றி கிட்டும். இளைய சகோதரர் வழியில் அனுகூலம் உண்டு. தந்தையாரை அனுசரித்து செல்ல வேண்டும். அவர் மூலம் அனுகூலம் இருந்தாலும் அதிக உதவிகள் கிட்டாது. சொந்த தொழிலில் லாபம் இருக்கலாம். பொறுமை அவசியம்.

உங்கள் அச்சாரம் You Tube Channel ல்

ரசித்து பார்க்க பல குறும்படங்கள்




சொல்லிட்டாளே காதல் கதை குறும்படம்



## செய்திக்கதம்பம்!

- பாப்பனப்பட்டு வ.முருகன்

**ஊர்வனங்களோடு வாழ்பவர்!**



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 67 வயது பிலி.்.ப் கில்லெட் (Philippe Gillet), சிறுவயது முதல் ஊர்வன இனப் பிராணிகளை விரும்பி, தனது வீட்டை அவற்றின் புகலிடமாக மாற்றியுள்ளார்.

மேற்கு பிரான்ஸில், நான்ட்ஸ் நகருக்கு அருகிலுள்ள கூரான் (ஊழுரவூசழுெ) எனும் இடத்தில் உள்ள அவரது வீட்டில், முதலைகள், பாம்புகள், சிலந்திகள், பல்லிகள் உள்ளிட்ட, சுமார் 400 ஊர்வன இனங்கள் வாழ்ந்து வந்தன.


அலி மற்றும் கேட்டர் என்ற இரு முதலைகள், அவரது வாழ்க்கை அறையில் வசிக்கின்றன. மேலும், 50 கிலோ எடையுள்ள ஆமை, தோட்டத்தில் உலாவுகிறது. ஆபத்தான பாம்புகள், இரு கதவுகள் கொண்ட அறையில் பாதுகாக்கப்படுகின்றன.

இவர் இவற்றை கைவிடப்பட்ட அல்லது வேறு இடங்களில் தேவையற்றவையாகக் கருதப்பட்டவற்றை மீட்டு பராமரிக்கிறார். இவரது இன்.்.ப்-.்.பான் (ஐகெ-குயரநெ) அமைப்பு மூலம், மக்களுக்கு ஊர்வன இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஊர் ஊராக கண்காட்சிகள் நடத்துகிறார்.

உரிய அனுமதிகளுடன் இவற்றை பராமரிப்பதாகவும், உள்ள□ர் மக்கள் இவரது வீட்டிற்கு வருவதாகவும் கூறுகிறார். இருப்பினும், தீயணைப்பு படையினர், அவசர காலங்களில் இவரது வீட்டிற்குள் நுழையத் தயங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**நாஸ்கா கோடுகள் எனும் மர்மப் புதிர்!**

பெரு நாட்டின் நாஸ்கா பாலைவனத்தில், சுமார் 400 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ள நாஸ்கா கோடுகள், உலகின் மர்மமான புதிர்களில் ஒன்றாகும். தரையில் இருந்து பார்க்கும்போது நீண்ட பாதைகளாகத் தோன்றும் இவை, வானில் இருந்து பறவைகள், குரங்கு, சிலந்தி போன்ற பிரம்மாண்ட வடிவங்களாகக் காட்சியளிக்கின்றன.



இந்தக் கோடுகள் ஏன், எப்படி உருவாக்கப்பட்டன என்பது, இன்றும் மர்மமாகவே உள்ளது.

1926ல், பெருவைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வாளர் டோரிபியோ மெஜியா செச்பே (Toribio Mejía Xesspe) இவற்றைக் கண்டறிந்தார்.

1930களில் விமானத்தில் பயணித்தவர்கள், இவற்றை உலகுக்கு அறிமுகப்படுத்தினர். அறிவியலாளர்களின் கருத்துப்படி, கி.மு. 700 முதல் கி.பி. 700 வரை வாழ்ந்த நாஸ்கா மக்களால் இவை உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பாலைவனத்தின் மேற்பரப்பில் உள்ள, இரும்புத்தூள் கலந்த பழுப்பு நிறப் பாறைகளை அகற்றி, கீழே உள்ள வெளிர் மண்ணை வெளிப்படுத்தி, இந்த வடிவங்கள் உருவாக்கப்பட்டன. இதனால், மழை, சூறாவளி போன்ற இயற்கைப் பேரிடர்களையும் தாங்கி, 2000 ஆண்டுகளாக இவை நிலைத்திருக்கின்றன.

இந்தக் கோடுகளின் நோக்கம் குறித்து பல கருதுகோள்கள் உள்ளன. சிலர், இவை வேற்றுகிரகவாசிகளுடன் தொடர்பு கொள்ளவோ, கடவுளை வழிபடவோ, நீர் பற்றாக்குறையை நிர்வகிக்கவோ உருவாக்கப்பட்டதாக நம்புகின்றனர்.

மற்றவர்கள், இவை வானியல் அவதானிப்புகளுக்காகவோ அல்லது மதச் சடங்குகளுக்காகவோ உருவாக்கப்பட்டிருக்கலாம் என்கின்றனர்.

எளிய கருவிகளைப் பயன்படுத்தி இத்தகைய நேர்கோடுகளை உருவாக்கியது எப்படி என்பது, இன்னும் ஆச்சரியமளிக்கிறது.

பெர்முடா முக்கோணம் போலவே, நாஸ்கா கோடுகளும், விடைதெரியாத மர்மமாகவே தொடர்கின்றன.

## நீர் மூலக்கூறுகள் கொண்ட புதிய கிரகம்!



நாசாவின் ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கி, பூமியிலிருந்து 97 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள, புது 9827ன என்ற கிரகத்தில் நீராவி இருப்பதைக் கண்டறிந்துள்ளது.

பூமியை விட இரு மடங்கு பெரிய இந்தப் பாறைக் கிரகத்தின் வளிமண்டலத்தில், நீர் மூலக்கூறுகள் உள்ளதை விஞ்ஞானிகள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இது, நீர் மூலக்கூறுகள் கண்டறியப்பட்ட, மிகச் சிறிய கிரகமாகும்.

புது 9827ன, மீன் (isces) விண்மீன் கூட்டத்தில் உள்ள சிவப்பு குறுமீன் ஒன்றை, 6.2 நாட்களுக்கு ஒருமுறை சுற்றுகிறது. இதன் வளிமண்டலத்தில் ஹைட்ரஜனுடன் நீராவி கலந்திருக்கலாம்.

இது ஒரு மினி-நெப்டியூன் கிரகமாக இருக்கலாம் அல்லது நீர் மற்றும் பாறைகளால் ஆன, யூரோப்பா போன்ற ஒரு கிரகமாக இருக்கலாம்.

இதன் வெப்பநிலை 425□ஊ (வெள்ளி கிரகத்தைப் போன்று) இருப்பதால், இது உயிர் வாழ ஏற்றதல்ல. ஆனால், நீராவி நிறைந்த வளிமண்டலம் கொண்ட கிரகங்களைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது.

2017ல், கெப்ளர் தொலைநோக்கி இதைக் கண்டறிந்தது. ஹப்பிள், மூன்று ஆண்டுகளில் 11 முறை இதன் பயணத்தை (வசயளெவை) கவனித்து, நீர் மூலக்கூறுகளின் நிறமாலை அடையாளத்தைக் கண்டது.

இந்தக் கண்டுபிடிப்பு, பிற நட்சத்திரங்களைச் சுற்றும் நீர் நிறைந்த கிரகங்களின் இருப்பு மற்றும் பன்முகத்தன்மையை ஆராய முக்கியமான தாகும். இதை மேலும் ஆய்வு செய்ய ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி பயன்படுத்தப்படலாம்.

## மதுபானக் கடைகள் திறக்கும் சவுதி!

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், வேலை மற்றும் கல்வி நிமித்தமாக தங்கியிருக்கும் நாடாக உள்ளது, சவுதி அரேபியா.

வெளிநாட்டவர்களை ஈர்க்க, அந்நாட்டு அரசு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 1952 முதல் மது விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்த சவூதியில், முதல் மதுபானக் கடை திறக்கப்பட உள்ளதாக, இளவரசர் முகமது பின் சல்மான் தலைமையிலான அரசு அறிவித்துள்ளது.



இந்தக் கடை, ரியாத் நகரின் தூதரகப் பகுதியில் (Diplomatic Quarter) அமைந்து, முஸ்லிம் அல்லாத வெளிநாட்டு தூதர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

வாங்குபவர்கள், ஷனுனிடழ' என்ற மொபைல் செயலி மூலம் பதிவு செய்து, வெளியுறவு அமைச்சகத்திடம் அனுமதிக் குறியீடு பெற வேண்டும்.

மாதாந்திர ஒதுக்கீட்டு வரம்பு, 240 புள்ளிகள். இதில், 1 லிட்டர் ஸ்பிரிட்ஸ்ரீ 6 புள்ளிகள், மதுஸ்ரீ3 புள்ளிகள், பீர்ஸ்ரீ1 புள்ளி அடங்கும்.

21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும், உரிய உடை, புகைப்படம் எடுக்கத் தடை போன்ற கட்டுப்பாடுகள் உள்ளன. இது, மதுவின் கள்ளச் சந்தையை கட்டுப்படுத்துவதற்கும், வி'ன் 2030 இன் கீழ், சவூதியை சுற்றுலா மற்றும் வணிக மையமாக மாற்றுவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

## வளர்ப்புப் பிராணிகளுக்கு சொத்தெழுதிய பாட்டி!

சீனாவின் 'ஷாங்காய் நகரைச் சேர்ந்த மூதாட்டி லியூ, தனது 20 மில்லியன் யுவான் (சுமார் 23 கோடி ரூபாய்) மதிப்புள்ள சொத்துகளை, முதலில் மூன்று பிள்ளைகளுக்கு உயிலில் பகிர்ந்து எழுதியிருந்தார்.

ஆனால், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டபோது, அவரது பிள்ளைகள் யாரும் வருகை தரவோ, தொடர்பு கொள்ளவோ இல்லை.

இதனால் மனமுடைந்த லியூ, தனது

வளர்ப்பு நாய்கள் மற்றும் பூனைகளுக்கு அனைத்து சொத்துகளையும் எழுத முடிவு செய்தார். ஏனெனில், அவை மட்டுமே அவருக்கு ஆறுதலாக இருந்தன.



சீனாவில் விலங்குகளுக்கு நேரடியாக சொத்து வழங்குவது சட்ட விரோதமானதால், லியூ ஒரு உள்ள□ர் கால்நடை மருத்துவமனையை நிர்வாகியாக நியமித்தார். இந்த மருத்துவமனை, அவரது வளர்ப்பு விலங்குகள் மற்றும் அவற்றின் வாரிசுகளின் பராமரிப்பை உறுதி செய்யும்.

பீஜிங்கிலுள்ள சீன உயில் பதிவு மையத்தின் அதிகாரி சென் கை, லியூவுக்கு நம்பகமான ஒருவரை மேற்பார்வையாளராக நியமிக்க அறிவுறுத்தியதாகவும், பிள்ளைகள் மனம்மாறினால் உயிலை மாற்றலாம் என்றும் தெரிவித்தார்.

இந்த முடிவு, சீன சமூக வலைதளங்களில் குடும்ப உறவுகள் மற்றும் உயில் நடைமுறைகள் குறித்து விவாதத்தைத் தூண்டியுள்ளது.

**எலும்புக்கூடுகளுடன் புதையல்!**



ரோம் நகருக்கு வடக்கே, பண்டைய டார்குனியா நகருக்கு அருகிலுள்ள 52 ஏக்கர் நிலப்பரப்பில், சூரிய மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக, கடந்த 2022 முதல் நடந்த அகழ்வாராய்ச்சியில், 57 அலங்கரிக்கப்பட்ட கல்லறைகளில், 67 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன.

இவை இரண்டாம் முதல் நான்காம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டவையாகக் கருதப்படுகின்றன.

இந்தக் கல்லறைகளில், தங்க நெக்லஸ்கள், காதணிகள், அம்பர் மற்றும் பொறிக்கப்பட்ட வெள்ளி மோதிரங்கள், விலையுயர்ந்த கற்கள், டெரகோட்டா மண்பாண்டங்கள், ரோமானிய நாணயங்கள், மெருகூட்டப்பட்ட கண்ணாடி பொருட்கள், அமுலெட்டுகள் மற்றும் ஆடைகள், விலையுயர்ந்த தோல் செருப்புகள், காலுறைகள் ஆகியவை கிடைத்தன.

எலும்புகளில் உடல் உழைப்பின் அறிகுறிகள் இல்லாததால், இவை உயர்குடி ரோமானிய குடும்பங்களைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

கல்லறைகள் பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக, கூட்டுப் பயன்பாட்டிற்கு உருவாக்கப்பட்டவை, சிலவற்றில் எலும்புக்கூடுகள், ஒருவரை ஒருவர் கட்டியணைத்த நிலையில் கிடைத்தன.

கல்லறைகளின் உட்புறம், வண்ணத்துணிகள், ஓடுகள் அல்லது டெரகோட்டா பொருட்களால் அலங்கரிக்கப்பட்டு, இறந்தவர்களின் இல்லங்களைப் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இந்த அகழ்வு, டார்குனியாவுக்கு அருகிலுள்ள கார்கரெல்லோ (Carcarello) பகுதியில், Eos Arc நிறுவனத்தின் தலைமை தொல்பொருள் ஆய்வாளர் எமானுவேல் கியானினி தலைமையில் நடைபெற்றது.


வரலாற்று ஆதாரங்கள், இப்பகுதியில் தபேலரியா (வுயடிநடடயசயை) என்ற பயணிகள் நிலையத்தைக் குறிப்பிட்டாலும், இத்தகைய புராதன கல்லறைகள் இருப்பது ஆச்சரியமளித்தது.

பெரிய கற்பாறைகள் இப்பகுதியை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாமல் பாதுகாத்ததால், கல்லறைகள் சேதமடையாமல் இருந்தன.

புராதன பொருட்கள் பாதுகாப்புப் பணிகளுக்காக அனுப்பப்பட்டு, சில சாண்டா செவெரா கோட்டையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்டுபிடிப்பு, ரோமானிய புராதன பண்பாட்டைப் புரிந்துகொள்ள முக்கியமானதாக உள்ளது.

**பூக்களால் தாடி அலங்காரமெனும் வினோத ஃபேஷன்!**



ஆண்கள் தங்கள் தோற்றத்தை மேம்படுத்த தாடி வளர்ப்பது, பொதுவான பழக்கமாக உள்ளது. இதற்காக அவர்கள், பிரத்யேக எண்ணெய்கள், கிரீம்கள் பயன்படுத்தி தாடியை பராமரிக்கின்றனர்.

ஆனால், தற்போது ஒரு வினோதமான பேஷன் உலகளவில் பரவி வருகிறது. அதாவது, தாடியை பூக்களால் அலங்கரித்து அழகு படுத்துவது.

இந்த புதிய மோகம், குறிப்பாக வெளிநாடுகளில், சமூக வலைதளங்களில் பிரபலமடைந்துள்ளது.

இந்த டிரெண்டில், ஆண்கள் தங்கள் தாடியில் மலர்களைச் சொருகி, வண்ணமயமான தோற்றத்தை உருவாக்குகின்றனர். சிலர் ஒருவருக்கொருவர் சவால் விடுத்து, தங்கள் தாடி அலங்காரங்களை இன்ஸ்டாகிராம், டிக்டாக் போன்ற தளங்களில் பதிவிடுகின்றனர்.

இந்த பாணி, திருமண புகைப்படங்களிலும் பிரபலமாகி வருகிறது. மணப்பெண்ணின் மலர் அலங்காரத்திற்கு இணையாக, மணமகன்கள் தங்கள் தாடியில் ரோஜா, மல்லிகை, அல்லது காட்டுப்பூக்களை வைத்து புகைப்படங்களுக்கு போஸ் கொடுக்கின்றனர்.

இது திருமண விழாக்களுக்கு தனித்துவமான, கலைநயமிக்க தோற்றத்தை அளிக்கிறது.

இந்த மோகம் 2015ம் ஆண்டு முதல், மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில், "பிளவர் பியர்ட்" (Flower Beard) என்ற பெயரில் தொடங்கியது.

இது ஹிப்ஸ்டர் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவும், சமூக வலைதள சவால்களின் மூலமும் பரவியது.

இந்தியாவில் இதுவரை இந்த டிரெண்ட் பரவலாக இல்லை என்றாலும், இளைஞர்களிடையே சமூக வலைதளங்களின் செல்வாக்கு காரணமாக, இது விரைவில் பிரபலமடைய வாய்ப்புள்ளது.

தாடி வைத்திருப்பவர்கள், இந்த புதுமையான அலங்காரத்தை முயற்சிக்கத் தயாராகலாம்.

**17 ஆம் பக்க தொடர்ச்சி "சக்தித் திருமகன்"**

தயாரிப்பாளர் தனஞ்செயன் பேசுகையில், "தமிழ் சினிமாவின் விடாகண்டன், கொடா கண்டன் விஜய் ஆண்டனி அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். மார்கன் படத்தின் வெற்றிக்கு வாழ்த்துகள். விஜய் ஆண்டனி அவர்களை பற்றி நான் பல முறை சொல்லியிருக்கிறேன். விஜய் ஆண்டனி பிலிம் கார்பரே'ன் தயாரித்த எந்த படமும் தோல்வி அடைந்ததில்லை. விமர்சக ரீதியாக வெற்றியடையாவிட்டாலும், வணிக ரீதியாக வெற்றியடையும். தமிழ் சினிமாவில் படங்களை பிஸினஸ் செய்யும் நுட்பம் யாருக்கும் தெரியாது. ஆனால், விஜய் ஆண்டன- ியின் படங்கள் அனைத்தும் வியாபார ரீதியாக சிறப்பாக கையாண்டுவிடுவார். இப்படத்தின் திரையரங்கு உரிமையை தவிர மற்ற அனைத்து உரிமைகளையும் விற்றுவிட்டார் விஜய் ஆண்டனி.

நாம் அனைவரும் பார்த்து வியந்த ஒரு இயக்குனர் தான் அருண் பிரபு. இப்படத்தை சிறப்பாக இயக்கியுள்ளார். இதற்கு முன் அவர் இயக்கிய அருவி மற்றும் வாழ் படத்திலிருந்து இப்படம் மாறுபட்டு இருக்கும். இப்படத்தின் மூலம் திருப்தி அறிமுகமாகிறார் அவருக்கு வாழ்த்துகள். ஒரு முழு கமர்ியல் படமாக சக்தித் திருமகன் வெற்றியடைய வாழ்த்துகிறேன்." என்றார்.

இயக்குநர் அருண் பிரபு பேசுகையில், "பொதுவாகவே எனக்கு ஜனரஞ்சகமான அரசியல் படம் பார்க்க எனக்கு பிடிக்கும், அப்படிபட்ட படம் தான் சக்தித் திருமகன் படமும். அனைத்து தரப்பு மக்களுக்கும் பிடிக்கும் வகையில் இப்படம் இருக்கும். ஒரு கதையை சொல்லும்போது ஒரு பதட்டம் எப்போதுமே இருக்கும். அந்த படத்தில் ஹீரோயிசமும் இருக்கும். அதை இப்படத்தில் நான் இயக்கியுள்ளேன். அருவி படத்தில் எந்த அளவிற்கு உழைத்தோமோ அதே உழைப்பு தான் இப்படத்திலும் செய்திருக்கிறேன். இப்படத்திற்கும் உங்களின் ஆதரவு கிடைக்கும் என்று நினைக்கிறேன் நன்றி." என்றார்.




# அச்சாரம்

ACCHARAM

பத்திரிகை மாத இதழ்
Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர் ______________________ த.பெ. ______________________

நிரந்தர முகவரி ______________________________________________

______________________________________________________

பாலினம் ______________ தொழில் ______________________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு (ஆயுள்/ஆண்டு) // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## சந்தா கட்டண விபரம்

| | | | ✔ |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | - | ரூ.5,000/- | ☐ |
| பத்தாண்டு சந்தா | - | ரூ.2,500/- | ☐ |
| ஆண்டு சந்தா | - | ரூ.250/- | ☐ |
| நன்கொடை | - | ரூ. | ☐ |

<u>பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி</u>

திரு/திருமதி ______________________________________________

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

தொலைபேசி எண் ______________ கைப்பேசி ______________ இ.மெயில் ______________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், SF1 இரண்டாம் தளம் 5/10 அண்ணா காலனி விருகம்பாக்கம் சென்னை-600092 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணம்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

<u>வங்கி கணக்கு விவரம்:</u>

ACCHARAM - Current Account

Acc.No: 6565766161

Indian Bank, Saligramam Branch

IFS Code: IDIB000S082

# உலக சினிமா

- தமிழரசன்

## F1 (2025)




எனக்கு வாழ்வில் எல்லாமே கிடைத்திருக்கிறது. மிகவும் சந்தோ'மாய் உணர்கிறேன்.நான் ஒரு ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று நீங்கள் உணரும் போது ..

வாழ்வு அப்படியே தலைகீழாக மாறினால் என்னவாவீர்கள்?!

வாழ்வின் கொடூர முகத்தை எதிர்கொள்ளும் தைரியம் உங்களுக்குள் இருக்குமா?!

உங்களின் பிரியமானவர்கள் உங்களை விட்டு நிரந்தரமாய்பிரிந்து சென்றுவிட்டால்?

இத்தகைய நிகழ்வுகளால் நீங்கள் நிலை தடுமாறி.. மது, மாது , சூதாட்டம் என்று தடம் புரண்ட போதும் கூட. உங்களின் லட்சியத்தை நோக்கி பயணப்படுவது சாத்தியமா ?

ஆனால், உங்களின் இதயத் துடிப்பாக அந்த லட்சியம் மாறிவிட்டால் ..

அந்த இலக்கு உங்களை என்றுமே கை விடாது . "தேடி வந்து , என்னை எடுத்துக் கொள்" என்று உங்களின் முன் மண்டி போட்டு இறைஞ்சும் என்பதே க1 படத்தின் கதை.

மேற்சொன்னவற்றை..
சில வசனங்களின் மூலம் இயக்குனர் கடத்த விரும்பியவற்றை, பத்திரிக்கையாளர் நேர்காணலில் தனது Yeah .. Yeah .. Yeah .. என்ற ஒற்றை சொல் மூலமும் , விரக்தியான புன்னகையின் மூலமும் நமக்கு கடத்தியிருக்கிறார் கதையின் நாயகன் "பிராட் பிட்"

Sonny Hayes என்கிற அவரது கதாபாத்திரத்தின் பெயரை இனி எவருமே மறக்க மாட்டோம். அந்த அளவிற்கு அந்த கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார் பிராட் பிட். ஹெல்மட்டிற்குள் இருக்கும் அவரின் கண் விழிகள் கூட, நமக்கு உணர்வை கடத்தி அவ்வப்போது கலங்கடிக்கின்றன.

அவரது அந்த வெள்ளந்தி சிரிப்பும், சீட்டுக்கட்டின் சீட்டுகளையும், மஞ்சள் பந்துகளை குறி வைத்து எறிந்து பழகுவதிலும் , தனக்கு எதிரான எண்ணாகவே சீட்டு வந்த போதும் புன்னகை பூப்பதும் என எவர் மனதையும் கொள்ளை கொள்கிறார் மனிதர்.

Formula 1 என்றால் என்னவென்றே அறியாத ரசிகர்களை , கை பிடித்து அழைத்து ரேஸ் காரில் அமரவைத்து , 300 கி.மீ வேகத்தில் நம்மை பறக்கவும் வைத்திருக்கிறார் இயக்குனர் 9 போட்டிகள் முடிவதற்குள், நம் மனதை காரோடும், போட்டிகளோடும் கரைய வைக்கும் மாயத்தையும் புரிந்திருக்கிறார் என்றே சொல்லலாம். ஒரு தலைமுறை வயது வித்தியாசமுள்ள இரு நபர்கள், ஒரு இலக்கை நோக்கி குழுவாக பயணிக்கும் போது எதிர் கொள்ளும் நடைமுறை உளவியல் சிக்கல்களை அற்புதமாகக் கையாண்டு, தீர்வும் தந்தமைக்கு இயக்குனரை மனமாறபாராட்டலாம் .

பொதுவாக ஆங்கிலப்படங்கள் என்றாலே, 1.15 மணி அல்லது 1.5 மணி நேரம் என்றிருக்கும் போது , இரண்டரை மணி நேரமும் நம்மை கட்டிப்போட்டு விடுகிறார்கள் ஒவ்வொருவருமே .

உடன் வரும் டிரைவர் ஜோ்'வா பியர்ஸ் ,

உயிர்நண்பன் Ruben, Team Coach, Designer, Members என்று எவரையும் சோடை சொல்லவே முடியாது.

உயிரைப் பணயம் வைத்து தனது வாழ்நாள் லட்சியத்தை அடையும் அந்த நொடியிலும் கூட.. வெற்றிக் கோப்பையை, தன்னை அழைத்து வந்த நண்பனிடம் தரச் சொல்லும் போது .. நம் ஒவ்வொருவரின்கண்ணிலும் கண்ணீர் பெருக்கெடுப்பதை எவராலும் தடுக்கவே முடியாது . அவ்வளவு உணர்ச்சிப்பெருக்கான காட்சியமைப்புகள் மற்றும் நடிப்பு அருமை !

என்னடா வாழ்வு என்று மனம் சோர்வாக இருக்கிறதா ?
எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? என்று மனம் வருத்தமாய் இருக்கிறதா..
இந்த திரைப்படத்தை ஒருமுறை பாருங்கள் .

எழுச்சி அடைவீர்கள் நண்பர்களே.!

**கார்மேகம்**

நிலவும் பரிதியும்
நித்திரை கொண்டதோ

கார் கூந்தல் விரிப்போ
கார்முகில் கூட்டம்

பொதிகை தென்றலின்
பரிசமென வந்ததோ

வான்வெளி தோரணமோ
வானவில் கருவறையோ

விண்மீன்களை சிறைபிடித்திடும்
வலை பின்னலோ

நீர் நிறைந்த
கும்பமாய் கார்மேகம்.

காமன் அம்போ
மண்மகள் புன்னகைக்க

உழவர் உயிராய்
கைதொழும் ஆலயம்.

- கவிஞர் கா.கலைச்செல்வி
மாரப்பம்பாளையம் புதூர். திருச்செங்கோடு.

அப்பாகிட்ட கேட்டு இருக்கேன் பார்ப்போம் என்றாள்.

மாமாவை ஏன் க்'டப்படுத்துற சீர் செய்யும் வரை என் தங்கைக்கு நான் கடவுள், இப்போது என்னால் தாங்க முடியவில்லையே என விம்மினான்.

ஏங்க விடுங்க பார்த்துக்கலாம் இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது எனக் கூறினாள்.

இவ்வளவு நேரம் ஒன்றும் செய்ய முடியவில்லையே இனி என்ன செய்ய முடியும் என்றான் ஜீவா. கொஞ்சம் அமைதி இருங்க என்று கூறவும் வாசலில் யாரோ வரும் ஓசை கேட்டது. அப்பாவா தான் இருக்கும் என்று வெளியே சென்றாள்.

கலாவின் தந்தை கையில் மஞ்சள் பையுடன் நின்றார். வாங்க அப்பா என கலா தந்தையை அழைத்தாள். ஜீவா ஏதோ பிரமை பிடித்தது போல் இருந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் மானம் போய்விடுமே என்ன செய்வது என்றே யோசித்தான்.

ஜீவா ஏன் இப்படி இருக்க, இந்தா பணம் கட்டிட்டு வா என்றார் கலாவின் அப்பா.

மாமா உங்களையும் நான் க்'டப்படுத்திட்டேன் என்க. ஜீவா நீ என் அக்கா பையன் எனக்கு மூத்த மகன் தானே. கலாவும் எனக்கு ஒரே பெண் உங்களுக்கு செய்யாமல் வேற யாருக்கு செய்யப் போறேன். காசு இல்லைனா யாரும் மதிக்க மாட்டாங்க. வண்டியை அடமானம் வைச்சி தான் கடன் வாங்கி வந்தேன். முதல்ல ஆன்லைன் கடனை கட்டிட்டு வா என்றார். மாமா இந்த கடனை நான் அடச்சிடுவேன். காசேதான் கடவுளடானு சும்மா யாரும் சொல்லல.

சரி ஜீவா இனியாவது உன் வாழ்க்கையைப் பற்றி சிந்தி நான் கிளம்புறேன் என்றார் கலாவின் அப்பா.

மாமா சாப்பிட்டு இருங்க நான் பணத்தை கட்டிட்டு வரேன். நாங்களும் உங்களோடு வந்து தங்கி உங்களையும் அத்தையையும் பார்த்துக்குறோம். இந்த வீட்டை வாடகைக்கு விட்டுடலாம். இனி கடன் வாங்கி செலவு செய்யமாட்டேன். காசேதான் கடவுள்னு தெரிந்தது என்று கூறி பணத்துடன் உற்சாகமாக ஆன்லைன் கடனை கட்ட வெளியே சென்றான்.

பார்க்க ரசிக்க

சினிமா படங்கள் குறும்படங்கள் ஆல்பம் பாடல்கள் சினிமா பாடல்கள்

சினிமா ஆடியோ விழாக்கள்

பிரபலங்களின் பேட்டிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் காண

அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)








SUBSCRIBE LIKE SHARE

# கவிதைக் கூடல்

**காதல் திருவிழா!**

மாவிலையும் வேப்பிலையுமாய்
தோரணங்கள் தெருவெல்லாம்
அம்மன் சன்னதிக்கு முன்பாக
பந்தலில் பரப்பி வைக்கப்பட்டிருக்கிறது
விதவிதமான முளைப்பாரிகள்
அச்சு அசலாய்
உன்னை நகலெடுத்தது போல
நாற்றுகளாய் இருந்தது
நீ வளர்த்தெடுத்த முளைப்பாரியும்
அம்மன் தரிசனத்திற்குக்
காத்திருக்கும் பக்தனாய்
உன் பின்னாடி சுற்றுவதே
திருவிழாவாகிக் கொண்டிருந்தது
எனக்குள்
செவ்வரியோடிய உன் விழிகள்
என்னை நேருக்கு நேராக
பார்த்த நொடியில்
உடம்பை முறித்தபடி
அம்மன் சாமியாட
உன்னுள் இறங்கிக் கொண்டிருக்க
நீயோ என்னுள்
இறங்கிக் கொண்டிருந்தாய்.

**பேரன்பின் எடையளவு தபால்தலைகள்!**

ஊடலால், “உம்“ என்றிருந்த என்னவளுக்கு
எனதன்பையெல்லாம்
நிலவு கடிதத்தில் எழுதி
வான தூதுவனிடத்தில் தந்தேன்
கடிதத்தை கையில் வாங்கிய
வான தூதுவன்
இருவரின் பேரன்பின்
எடையளவிற்கேற்ப தபால்தலைகள்
ஒட்ட வேண்டுமென்றான்
நட்சத்திரங்களை எல்லாம்
தபால் தலையாக
ஒட்டிக் கொன்டிருக்கிறேன் நான்.

- வீ.வைகை சுரேஷ்‘, தேனி

**வளர்ப்பு நாயைப் போல...**

உன் முகம் காற்றாடியாக
எங்கோ தெளிவின்றி அசைகிறது
விடுபடத்துடிக்கும்
உன் உயிரின் கடைசி பிரி
என் கைகளை அறுக்கிறது
நம் முதல் முத்தத்தை
எவ்வளவு முயன்றும்
நினைவு கூற முடியவில்லை
போலவே
நம் முதல் புணர்வையும்
அது ஒரு பிள்ளைக் கோலம்
எல்லா கம்பிகளும்
எப்படியோ இணைக்கப்பட்ட பின்னும்
புள்ளிகள் மீதமிருந்தன
நம் சில தீராத பிணக்குகள்
அடுப்பங்கரையின்
புழங்காத பாத்திரம் போல
களிம்பேறி விட்டன
மறந்து விடக் கூடாதென்று
ஒவ்வொரு நினைவாய்
எடுத்துப் பார்த்து காத்த போதிலும்
எப்படியோ பதங்கமாகி விட்டன சில
என் பிடி நழுவுகிறது
ஒரு வளர்ப்பு நாயைப் போல
மீளாத காயம் ஒன்றை
எஜமானனுக்குத் தந்து விட்ட
கூச்சத்துடன்
கைகளிலிருந்து திமிறி
வாலாட்டிக்கொண்டே
விண்ணில் மறைகிறது காற்றாb.

- பிரிம்யா கிராஸ்வின், தூத்துக்குடி

(தொகுப்பு: - பாப்பனப்பட்டு வ.முருகன்)

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR

# குறைந்த விலையில்


ஸ்ரீ பச்சையம்மன் துணை...

அரங்கூர் ஏரோபிளேன்


# S.R.நகர்

(சுசீலா – இராமசாமி)

தொழுதூர் To திட்டக்குடி ரோடு, பெரங்கியம் கிராமம்

APPROVED RERA & DTCP APPROVED

அரசு அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு




| Plot No | Sq.ft | Cent |
|---|---|---|
| 1 | 1611.77 | 3.70 |
| 2 | 1247.50 | 2.86 |
| 3 | 1247.50 | 2.86 |
| 4 | 1247.50 | 2.86 |
| 5 | 1252.49 | 2.87 |
| 6 | 1444.74 | 3.31 |
| 7 | 1477.05 | 3.39 |
| 8 | 1421.15 | 3.26 |
| 9 | 1453.59 | 3.33 |
| 10 | 1497.00 | 3.43 |
| 11 | 1528.19 | 3.51 |
| 12 | 1553.14 | 3.56 |
| 13 | 1550.55 | 3.56 |
| 14 | 900.09 | 2.06 |
| 15 | 975.14 | 2.24 |
| 16 | 1040.40 | 2.39 |
| 17 | 1440.18 | 3.30 |
| 18 | 951.56 | 2.18 |
| 19 | 1011.40 | 2.32 |
| 20 | 1315.78 | 3.02 |
| 21 | 1325.30 | 3.04 |
| 22 | 1512.50 | 3.47 |
| 23 | 1516.96 | 3.48 |
| 24 | 1521.06 | 3.49 |
| 25 | 1729.00 | 3.97 |
| 26 | 1772.50 | 4.07 |
| 27 | 1796.25 | 4.12 |
| 28 | 1833.56 | 4.21 |
| 29 | 1869.50 | 4.29 |
| 30 | 1704.48 | 3.91 |
| 31 | 1611.50 | 3.70 |
| 32 | 1588.60 | 3.64 |
| 33 | 1593.80 | 3.66 |
| 34 | 1573.00 | 3.61 |
| 35 | 1560.00 | 3.58 |
| 36 | 1381.80 | 3.17 |
| 37 | 1442.24 | 3.31 |
| 38 | 1232.50 | 2.83 |
| 39 | 1237.50 | 2.84 |
| 40 | 1237.50 | 2.84 |
| 41 | 1235.00 | 2.83 |
| 42 | 1428.25 | 3.28 |
| TOTAL | 59869.49 | 137.32 |

தொடர்புக்கு : 7358310286 R.நவீன் ராமசாமி

ACCHARAM, Tamil monthly, August 2025
RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Date of publication 1st Every Month
Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Poster at Pathrika channel Egmore
Posted between 1-7 August 2025

